




# தின பூமி

thinaboomi.com











**இலங்கை அதிபருடன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து பேச்சு**

...2-ம் பக்கம்

**5 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் இரு மடங்காகும்: நிர்மலா சீதாராமன் பேச்சு**

...3-ம் பக்கம்

**இன்னும் 5 விக்கெட்டுகள்தான்: டி-20 தொடரில் 2 சாதனைகளை படைக்கிறார் ஹர்த்திக் பாண்ட்யா**

...7-ம் பக்கம்






● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, தமிழ் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களை போற்றி பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில், 2023-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதை பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி துறை செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர் இரா.வைத்திநாதன், பி.சுசீலாவின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### கலைத்துறை வித்தகர் விருது:

## பாடகி சுசீலா, கவிஞர் மு.மேத்தாவுக்கு வழங்கி முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, அக். 05-

பாடகி சுசீலா, கவிஞர் மு.மேத்தாவுக்கு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை வழங்கி அவர்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 2022-2023ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் தமிழ் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றி பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில் "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது" ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளான ஜூன் திங்கள் 3-ம் நாளன்று வழங்கப்படும் என்றும், தேர்ந்தெடுக்கப்படும் விருதாளர்களுக்கு 10 லட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்துகின்ற வகையில், முதல்வர் மு.க.ஸ்டாலினின் உத்தரவின் பேரில், விருதாளர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு, திரைப்பட இயக்குனர் எஸ்.பி.முத்துராமன் தலைமையில், நடிகர் சங்கத் தலைவர் நாசர், திரைப்பட இயக்குனர் கரு.பழனியப்பன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

அக்குழுவின் பரிந்துரையின்படி 2022-ம் ஆண்டிற்கான "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட திரைப்படத் துறையில் சுமார் 500 திரைப்படங்களுக்கு மேல் கதை, திரைக்கதை, வசனம் எழுதிப் புகழ்பெற்ற ஆரூர்தாசுக்கு கடந்த 3.6.2022 அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளையொட்டி கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்பித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வழக்கமாக வழங்கப்படும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுடன், சிறப்பினமாகப் பெண்மையைப் போற்றும் வகையில் இந்த ஆண்டு கூடுதலாக ஒரு பெண் திரைக்கலைஞருக்கும் இந்த விருதினை வழங்கிச் சிறப்பித்திட முதல்வர் 11.07.2024 அன்று உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, திரையுலகில் 20,000க்கும் மேற்பட்ட பலமொழிப் பாடல்களைப் பாடியவரும், "தென்னிந்தியாவின் இசைக்குயில்" என்றும், "மெல்லிசை அரசி" என்றும் பாராட்டப்பட்டவருமான திரைப்படப் பின்னணிப் பாடகி பி.சுசீலாவுக்கும், தமிழ்ப் பேராசிரியரும், புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்தவரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான கவிஞர் மு.மேத்தாவுக்கும், 2023-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படும் என்று முதல்வர் 24.9.2024 அன்று அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த அறிவிப்பின்படி, முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நினைவாக கவிஞர் முமேத்தாவுக்கும், பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கும் 2023-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது மற்றும் தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், நினைவுப் பரிசும் வழங்கி சிறப்பித்தார்.

### திருப்பதி லட்டு விவகாரம்:

## சி.பி.ஐ. கண்காணிப்பில் புதிய விசாரணைக்குழு

**ஆந்திர அரசின் குழுவை மாற்றி சுப்ரீம் கோர்ட் உத்தரவு**

புதுடெல்லி,அக். 05-

திருப்பதி லட்டு தயாரிப்பில் விலங்குகளின் கொழுப்பைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் விவகாரத்தில் ஆந்திரப் பிரதேச அரசு அமைத்த சிறப்பு விசாரணைக்குழுவை மாற்றி சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. மேலும், 2 சி.பி.ஐ. அதிகாரிகள் அடங்கிய புதிய சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்து உத்தரவிட்டுள்ளது.



**கலப்பட நெய்யை...**

ஆந்திரப் பிரதேச முதல்வராக ஜெகன் மோகன் ரெட்டி இருந்தபோது, விலங்குகளின் கொழுப்பு, மீன் எண்ணெய் அடங்கிய கலப்பட நெய்யை திருப்பதி லட்டு தயாரிக்கப் பயன்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக பல்வேறு மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த மனுக்களை நீதிபதிகள் பி.ஆர். கவாய், கே.வி. விஸ்வநாதன் ஆடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது.

**கண்காணிப்பார்...**

இந்த வழக்கு நேற்று (அக்.4) விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த விவகாரம் தொடர்பாக ஆந்திரப் பிரதேச அரசு அமைத்துள்ள சிறப்பு விசாரணைக் குழுவை, மாற்றி சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. புதிய சிறப்பு விசாரணைக் குழு, 2 சிபிஐ அதிகாரிகள், 2 ஆந்திரப் பிரதேச காவல்துறை அதிகாரிகள், 1 இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய பிரதிநிதி ஆகியோரைக் கொண்டதாக இருக்கும் என அறிவித்த சுப்ரீம் கோர்ட், இந்த விசாரணைக் குழுவை சிபிஐ இயக்குநர் கண்காணிப்பார் என்றும் உத்தரவிட்டுள்ளது.

**அனுமதிக்க முடியாது...**

விசாரணைக் குழு சுப்ரீம் கோர்ட்டின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. அப்போது, நீதிமன்றத்தை அரசியலுக்கான களமாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த நீதிபதிகள், இது ஒரு அரசியல் நாடகமாக மாறுவதை நாங்கள் விரும்பவில்லை" என்று தெரிவித்தனர்.

**உலகம் முழுவதும்...**

நேற்றைய வழக்கு விசாரணையில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "லட்டு தயாரிக்க கலப்பட நெய் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் உண்மை இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

திருப்பதி ஏழுமலையான் பக்தர்கள் உலகம் முழுவதும் பரவி உள்ளனர். உணவு பாதுகாப்பும் இதில் அடங்கி உள்ளது.

சிறப்பு விசாரணைக் குழு மாற்றி அமைத்ததில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் திறமையானவர்கள்" என தெரிவித்தார்.

### 4 முனை போட்டியில் வெல்லப்போவது யார்?

# அரியானாவில் இன்று சட்டப்பேரவை தேர்தல்

**90 தொகுதிகளில் ஒரேகட்டமாக வாக்குப்பதிவு**

சண்டிகர், அக். 05-

அரியானாவில் 90 சட்டசபை தொகுதிகளில் இன்று ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 4 முனை போட்டி நிலவும் அரியானாவில் ஆட்சியை கைப்பற்றப் போவது யார் என்பது வரும் 8-ம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையின் போது தெரியவரும்.

**பா.ஜ.க. தனித்து...**

அரியானா மாநிலத்தில் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. அங்கு இன்று ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் 8-ந்தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இந்த தேர்தலில் பா.ஜ.க. தனித்து போட்டியிடுகிறது. அதே போல் காங்கிரசுக்கும், ஆம் ஆத்மிக்கும் இடையே கூட்டணி ஏற்படாததால், 2 கட்சிகளும் தனித்தனியே களம் காண்கின்றன. மறுபுறம் ஜனநாயக ஜனதா கட்சியும், ஆசாத் சமாஜ் கட்சியும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. எனவே இந்த தேர்தலில் 4 முனை போட்டி நிலவுகிறது.

**1031 வேட்பாளர்கள்...**

அரியானாவில் 90 சட்டப்பேரவை தொகுதிகளில் இன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். இங்கு தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. இங்கு 2 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். இவர்களுக்காக 20,629 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு 1031 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களில் 101 பேர் பெண்கள்.

**தீவிர பிரச்சாரம்...**

இங்கு கடந்த சில நாட்களாக பாஜக, காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் யமுனா நகர் மாவட்டத்தில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். பா.ஜ.க. மூத்த தலைவர்கள் அனுராக் தாக்கூர், ஹேமா மாலினி ஆகியோர் குருஷேத்ராவில் தீவிர பிரச்சாரம் செய்தனர். காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி பிவானி மற்றும் ஜிந்த் மாவட்டத்தில் பிரச்சாரம் செய்தார். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே சர்க்கி தத்ரி பகுதியில் நடைபெற்ற பிரச்சார பேரணியில் கலந்து கொண்டார். பிரதமர் மோடி இங்கு 4 பிரச்சார கூட்டங்களில் பங்கேற்றார்.

(கடைசி பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் தற்போது எங்கும் டெங்கு நோய் பாதிப்பு இல்லை

**அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்**

கோவை, அக். 05-

தமிழகத்தில் எங்கும் டெங்கு நோய் பாதிப்பு இல்லை என்று மருத்துவமனை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கோவை சிங்காநல்லூரில் 1.50 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல கட்டடம் மற்றும் காணொலி வாயிலாக தாளியூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 58.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார அலகு கட்டடம் உள்ளிட்டவற்றை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று திறந்து வைத்தார்.

இதனை அடுத்து சிங்காநல்லூரில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் பயனடையும் நபர்களுக்கு மருந்து பெட்டகத்தை அமைச்சர் வழங்கினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன், தற்போது புதுப்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்கனவே இருக்கின்ற மருத்துவர்கள், செவிலியர்கள் போதுமானது. இதுவரை 946 மருந்தாளர்கள் 500-க்கும் மேற்பட்ட உதவியாளர்கள் மருத்துவமனைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோல 2000-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடம் நிரப்பப்பட உள்ளது.

செவிலியர்கள் மருத்துவர்கள் நிரப்பும் பணி தொடர்பாக நீதிமன்றத்தில் 38 வழக்குகள் போடப்பட்டுள்ளது. அந்த வழக்கில் நேற்றைய தினம் நீதிமன்ற தீர்ப்பின்படி 14 மருத்துவமனையில் கல்லூரி முதல்வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதே போல நீதிமன்றத்தில் வழக்கு போட்டவர்களை அழைத்துப் பேசும் பணி நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சியில் 1500க்கும் மேற்பட்ட செவிலியர்களை நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. அதே போல ஒப்பந்த பணியில் இருப்பவர்களை நிரந்தரம் செய்ய முடியாது. அதற்கு எம்ஆர்பி தேர்வு எழுதுவார்கள், அவர்களை மட்டுமே பணி நிரந்தரம் செய்யமுடியும்.

நகரம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் காய்ச்சல் உள்ளதா என மருத்துவ நடமாடும் வாகன மூலம் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைப்பொழிவு அதிகமானால் கிராமப்புற பகுதிகளில் காய்ச்சல் தடுப்பு முகாம் போடப்படும்.

தமிழகத்தில் தற்போது எங்கும் டெங்கு பாதிப்பு இல்லை. 2017 இல் தமிழகத்தில் டெங்கு காய்ச்சலால் 65 பேர் உயிரிழந்தனர். இந்த வருடத்தில் டெங்கு இறப்பு என்பது ஆறு பேர் தான். எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்காலத்தில் தான் டெங்குவால் அதிகம் பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது டெங்கு பாதிப்பு எங்கு உள்ளது என இபிஎஸ் காண்பிக்க வேண்டும் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### 'கூல் லிப்' போதை பொருளை விற்பனை செய்பவர்கள் மீது

# குண்டர் சட்டத்தின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?

**தமிழக அரசுக்கு ஐகோர்ட் கிளை கேள்வி**

மதுரை, அக். 05-

'கூல் லிப்' போதை பொருளை விற்பனை செய்பவர்கள் மீது ஏன் குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது? என்று தமிழக அரசுக்கு ஐகோர்ட் கிளை கேள்வி எழுப்பியுள்ளது.

ஐகோர்ட் மதுரை கிளையில் நீதிபதி பரத சக்கரவர்த்தி கூல் லிப், குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் குறித்து தாமாக முன்வந்து வழக்கு ஒன்றை விசாரித்து வருகிறார். இந்த நிலையில், கூல் லிப் தயாரிப்பு மற்றும் விற்பனைக்குத் தடை விதிக்கக்கோரி தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் சார்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர்கள் ஆஜராகினர். தமிழகத்தில் கூல் லிப், குட்கா உள்ளிட்ட போதைப்பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டு, கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று முறையிட்டனர்.

அப்போது மத்திய அரசு சார்பாக ஆஜரான வழக்கறிஞர்கள், தமிழகத்தில் எந்த குட்கா தயாரிப்பிற்கும் அனுமதி இல்லை. பல்வேறு கட்டுப்பாடுகளையும் மத்திய அரசு விதித்து வருகிறது என தெரிவித்தனர். இரு தரப்பு வாதங்களையும் கேட்டுக் கொண்ட நீதிபதி, தற்போது கூல் லிப், குட்கா உள்ளிட்ட போதைப்பொருட்கள் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்காலத்தை பாதிக்கிறது.

இப்படியே விட்டால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். கூல் லிப் போதை பொருளை விற்பனை செய்பவர்கள் மீது குண்டர் சட்டத்தில் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? என்று தமிழக அரசுக்கு நீதிபதி கேள்வி எழுப்பினார்.

மேலும் நடவடிக்கை எடுக்காவிட்டால் மத்திய, மாநில அரசுகளுக்கு விரைவில் போதைப்பொருட்களை தடை செய்வது குறித்த உரிய வழிகாட்டு நெறிமுறைகளை நீதிமன்றமே பிறப்பிக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்து வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**




BSE -808.65 பாயின்ட் 81,688.45

NSE -235.50 பாயின்ட் 25,014.60



**தங்கம்**
1 சவரன் ₹56,960
1 கிராம் ₹7,120



**வெள்ளி**
1 கிலோ ₹103,000
1 கிராம் ₹103.00

**டாலர்** ₹84.01

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# இலங்கை அதிபர் திசநாயகாவுடன் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு



**கொழும்பு, அக். 05-**

கொழும்பில் இலங்கை அதிபர் அனுரகுமார திசநாயகாவை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெள்ளிக்கிழமை சந்தித்து பேசினார். அப்போது இருத்தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு நாட்டு தலைவர்களும் ஆலோசித்துள்ளனர். இந்த சந்திப்பின் போது, புதிய அதிபருக்கு பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஆகியோரின் வாழ்த்துகளையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

மேலும் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப் பிற்கு இந்தியா தொடர்ந்து தனது ஆதரவினை அளிக்கும் என்றும் ஜெய்சங்கர் தெரிவித்திருக்கிறார். முன்னதாக இலங்கை அதிபர் திசநாயகவை சந்திப்பதற்காக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று காலை இலங்கை சென்றடைந்தார். இலங்கையின் ஒன்பதாவது அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி முன்னணி வேட்பாளர் அனுரகுமார திசநாயக (56) அந்நாட்டின் 9-ஆவது அதிபராக செப். 23ஆம் தேதி பதவியேற்றார்.

இலங்கை தேர்தல் வரலாற்றிலேயே முதல்முறையாக முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் யாருக்கும் பெரும்பான்மை (50 சதவீதத்துக்கும் அதிகம்) கிடைக்காத நிலையில், 2-ஆவது சுற்று வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றியாளராக அனுர குமார திசாநாயக தேர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூகுளின் ஏ.ஐ. செயலி விரைவில் 8 இந்திய மொழிகளில் அறிமுகம்

## கூகுள் நிறுவன இந்திய சி.இ.ஓ. தகவல்

**புதுடில்லி, அக். 05-**

கூகுளின் ஏ.ஐ., செயலியான ஜெமினி தற்போது ஹிந்தி மொழியில் போதுமான தகவல்களை வழங்கி வருகிறது. இன்னும் சில வாரங்களில் தமிழ், மராத்தி, பெங்காலி உள்ளிட்ட 8 மொழிகளிலும் தயார் செய்யப்பட்டு விடும் என்றும் கூகுள் பிளே மூலம் இந்திய டெவலப்பர்கள் ஆண்டுக்கு ரூ.4,000 கோடி வரை சம்பாதிக்கின்றனர் என்றும் கூகுள் நிறுவனத்தின் இந்திய நிர்வாகி ரோமா தத்தா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கூகுளின் 10வது பதிப்பு தொடர்பான நிகழ்ச்சியில், நாட்டின் வளர்ச்சியில் ஏ.ஐ., தொழில்நுட்பத்தின் பங்களிப்பு குறித்து கூகுள் இந்திய தலைமை அதிகாரி ரோமா தத்தா சோபே பேசியதாவது: ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் மீதே எங்கள் நிறுவனத்தின் மொத்த கவனமும் இருக்கிறது. இதன் மூலம் இந்தியாவில் பொருளாதாரம் மற்றும் சமூக நலன் சார்ந்தபிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும்.

மேலும் விவசாயம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்டவைகளின் வளர்ச்சி குறித்தும் கூகுள் கவனம் செலுத்தி வருகிறது. இந்தியா உள்ளிட்ட நாடுகளின் வளர்ச்சியில் ஏ.ஐ., பெரும் பங்கு வகிக்கும். இளம் சிறுவர்கள் ஏ.ஐ., குறித்த திறனை வளர்த்து கொள்வதற்காக 4 மில்லியன் அமெரிக்க டாலர்களை கூகுள் நிறுவனம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளது. தற்போது, ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளில் ஒரு கோடி இந்தியர்களுக்கு ஏ.ஐ., திறன் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கூகுளின் ஏ.ஐ., செயலியான ஜெமினி தற்போது ஹிந்தி மொழியில் போதுமான தகவல்களை வழங்கி வருகிறது. இன்னும் சில வாரங்களில் தமிழ், மராத்தி, பெங்காலி உள்ளிட்ட 8 மொழிகளிலும் தயார் செய்யப்பட்டு விடும். செயலிகளுக்கான வருவாயை குறைத்த கூகுளின் முடிவுக்கு இந்திய டெவலப்பர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக தொடர்ந்து பேச்சுக்கள் நடந்து வருகின்றன. கூகுள் பிளே மூலம் இந்திய டெவலப்பர்கள் ஆண்டுக்கு ரூ.4,000 கோடிக்கு மேல் சம்பாதிக்கின்றனர், எனக் கூறினார்.

## அர்ச்சகர்கள் பிள்ளைகளின் மேற்படிப்புக்கான

# கல்வி உதவி தொகை ரூ.50 லட்சத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்


**சென்னை, அக். 05-**

அர்ச்சகர்கள் பிள்ளைகளின் மேற்படிப்புக்கான கல்வி உதவி தொகையாக 500 மாணவர்களுக்கு ரூ.50 லட்சத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

தலைமைச் செயலகத்தில், இந்து சமய அற நிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்ட கோவில்களில் பணி புரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் 50 லட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு தலா 10,000 ரூபாய்க்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.

இதன்மூலம் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற உயர்கல்வி பயிலும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் பயன்பெறுவர். கடந்தாண்டு இத்திட்டத்தின் மூலம் 400 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் வானில் ஒளிர்ந்த 80 ஆயிரம் ஆண்டுகள் பழமையான வால் நட்சத்திரம்



**ஊட்டி, அக். 05-**

ஊட்டியில் 80 ஆயிரம் ஆண்டுகள் பழமையான வால் நட்சத்திரம் தென்பட்டதாக நாசா ஆராய்ச்சியாளரான நஞ்சுண்டன் ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

சூரியனை நீள்வட்டபாதைகளில் ஒவ்வொரு கோள்களும் சுற்றி வருகின்றன. அதேபோல் தூசி, கற்கள், பனிக்கட்டி உள்ளிட்டவை இணைந்த ஏராளமான கலவைகளும் சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன. இதை தான் வால் நட்சத்திரம் என்கிறோம்.

இந்நிலையில் கடந்த 1-ம் தேதி மாலை 6 மணியளவில் மேற்குதொடர்ச்சி மலை யொட்டிய ஊட்டியில் மேற்கு வானப்பகுதியில் அரிய வால்நட்சத்திரம் ஒன்று தென்பட்டுள்ளது. 10 நிமிடங்கள் வானில் தென்பட்ட இந்த வால்நட்சத்திரத்தை கண்ணால் நேரடியாக காண முடிந்துள்ளது. ஆனால் அது என்ன என்பது பலருக்கும் தெரியவில்லை. ஏதோ ஒரு இயற்கை நிகழ்வு அல்லது வானவில் என்று நினைத்தனர்.

நாசா ஆராய்ச்சியாளரான ஜனார்த்தன் நஞ்சுண்டன், இது இயற்கை நிகழ்வு அல்ல. வானில் தென்பட்டது 80 ஆயிரம் ஆண்டுகள் பழமையான அரிய வால்நட்சத்திரம் என தெரிவித்துள்ளார். அவர் கூறும் போது, ‘ஊட்டியில் உள்ள மேற்கு வானத்தில் கடந்த 1-ம் தேதி மாலை நேரத்தில் ஒரு அரிய நிகழ்வு காணப்பட்டது. இது வழக்கமான இயற்கை நிகழ்வாக இருக்கும் என்று நினைத்தேன்.

மேலும் அது வானவில் நிறங்களை போன்று பல வண்ணங்களில் இருந்ததால் அது வானவில்லாக இருக்கும் என்று தான் நான் முதலில் நினைத்திருந்தேன். ஆனால் ஆராய்ச்சி செய்து பார்த்த பின்னர் தான் ஊட்டியில் தென்பட்டது 80 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த அரிய வால்நட்சத்திரம் என்பது தெரியவந்தது. இந்த வால்நட்சத்திரமானது பூமியில் இருந்து 129.6 மில்லியன் கி.மீ தொலைவில் இருந்தது. மாலை 6 மணியளவில் வானில் தெரிந்த வால்நட்சத்திரமானது 10 நிமிடங்கள் வானவில் அழகாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. இந்த வால் நட்சத்திரமானது சூரியன் வருவதற்கு முந்தைய நேரத்திலோ அல்லது சூரியன் மறையும் நேரத்திலோ தெரியும். இந்த வால்நட்சத்திரமானது மீண்டும் வருகிற 12-ம் தேதி வானில் தென்பட வாய்ப்புள்ளது’ என்றார்.

# லெபனானுக்கு முழு ஆதரவு: கத்தார் அறிவிப்பால் பதற்றம்

**தோகா, அக். 05-**

லெபனானுக்கு முழு ஆதரவு அளிப்போம் என்று கத்தார் அறிவித்துள்ளது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றத்தை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதல் நடத்தி வருகிறது. லெபனான் எல்லையை யொட்டிய இஸ்ரேல் பகுதிகளில் தினந்தோறும் ராக்கெட் மற்றும் ஏவுகணைகளை வீசி ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தி வருகிறது.

இது அங்கு வசித்து வந்த பல்லாயிரக்கணக்கான இஸ்ரேலியர்களை இடம் பெயர செய்தது. இதனால் ஹிஸ்புல்லா அமைப்பை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை இஸ்ரேல் ராணுவம் முடுக்கி விட்டது. அதன் ஒரு பகுதியாக முன்னெப்போதும் இல்லாத வகையில் லெபனான் மீது மிகப்பெரிய அளவிலான வான்வழி தாக்குதலை இஸ்ரேல் கடந்த மாத இறுதியில் தொடங்கியது.

தலைநகர் பெய்ரூட் மற்றும் தெற்கு லெபனான் பகுதிகளில் இஸ்ரேல் போர் விமானங்கள் சரமாரியாக குண்டு மழை பொழிந்தன. அப்படி பெய்ரூட்டில் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார். இதனால் கடும் கோபத்துக்கு ஆளான ஈரான் இஸ்ரேல் மீது நேரடி தாக்குதல் நடத்த துணிந்தது. அதன்படி கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இஸ்ரேல் நாட்டின் மீது நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருக்கிறது.

நேற்று முன்தினம் தலைநகர் பெய்ரூட் மற்றும் தெற்கு லெபனான் பகுதிகளில் நடத்தப்பட்ட வான்தாக்குதல்களில் ஏராளமான அடுக்குமாடி குடியிருப்புகள் தரைமட்டமாகின. பெய்ரூட்டில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் மீது குண்டு வீசப்பட்டதில் அந்த கட்டிடம் தரைமட்டமானது. அதன் இடிபாடுகளில் சிக்கி 9 பேர் பலியாகினர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். இதற்கிடையே, லெபானானில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள கத்தார் முன்வந்துள்ளது.

இது தொடர்பாக கத்தார் மன்னர் தமிம் பின் ஹமாத் அலி தானி கூறியதாவது: லெபனானில் சண்டையினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அளிக்க உத்தரவிட்டுள்ளேன். இந்த கொடூரமான தாக்குதல் விவகாரத்தில் லெபானானுக்கு கத்தார் முழு ஆதரவு அளிக்கும் என்று நான் உறுதி அளிக்கிறேன்'' என்றார்.

லெபனானுக்கு முழு ஆதரவு அளிப்போம் என்று கத்தார் அறிவித்துள்ளது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றத்தை மேலும் அதிகப் படுத்தியுள்ளது.

## காசாவின் மேற்குக்கரை முகாம் மீது

# இஸ்ரேல் வான்வழி தாக்குதலில் பலி எண்ணிக்கை 18 ஆக உயர்வு

**ரமல்லா, அக். 05-**

காசாவின் மேற்குக்கரையில் அமைந்துள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதலில் பலி எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினரை முழுவதுமாக அழிக்கும் நோக்கில் காசாவில் உள்ள பல்வேறு பகுதிகள் மீது இஸ்ரேல் ராணுவம் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்த தாக்குதல்களில் இதுவரை சுமார் 41 ஆயிரத்துக்கு அதிகமான பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், காசாவின் வட மேற்குக்கரையில் உள்ள துல்கர் அகதிகள் முகாமை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 18 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர் என்று பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. துல்கர் முகாமில் இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் ஏற்பட்டதாக பாலஸ்தீன பிரிவுகளின் ஒருங்கிணைப்பாளர் பைசல் சலாமா தெரிவித்துள்ளார்.

**05-10-2024**




**மேஷம்:-** வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். காரிய வெற்றிகள் களிப்பைத் தரும். தன்னம்பிக்கை கூடும். அரசு மற்றும் அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும்.

**ரிஷபம்:-** அனைத்து விதத்திலும் ஆதாயம் அடைவீர்கள். பயணத்தால் பயனடைவீர்கள். புதிய தோழியின் நட்பால் மனமகிழ்ச்சி ஏற்படும். வீடு, மனை வாங்கும் விருப்பங்கள் நிறைவேறும்.

**மிதுனம்:-** பயணத்தின் போது தடங்கல் ஏற்படலாம். குழந்தைகளுக்குச் சிறு உபாதைகள் ஏற்படலாம். உங்கள் திறமையால் பல சாதனைகள் புரிந்தாலும் நல்ல பெயர் கிடைக்காது.

**கடகம்:-** நிம்மதி குறைவதால், நித்திரை குறையும். வீட்டில் பொருட்களை மிகுந்த பாதுகாப்புடன் வைத்தால் இழப்பைத் தவிர்க்கலாம். அன்னைக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம்.

**சிம்மம்:-** குழந்தைகளால் மனமகிழ்ச்சி அதிகரிக்கும். துணைவியின் ஒத்துழைப்பால் துன்பம் தீரும். தனலாபம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும்.

**கன்னி:-** பெற்றோரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மேலதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் மேன்மை அடையலாம். பிறரிடம் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:-** பெயரும், புகழும் உயரும். பணவரவு உண்டு. பெரியோர் பாசம் காட்டுவர். மனதில் திருப்தி, மகிழ்ச்சி, வியாபாரத்தால் போதிய பணவரவு என யோகங்கள் தரும் நாள்.

**விருச்சிகம்:-** பெண்கள் செய்யும் வீண் செலவால் விரக்தி ஏற்படும். கோபத்தால் வீண்வம்பை விலைக்கு வாங்காதீர்கள். எதிர்பாராத இட மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**தனுசு:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். புதிய நண்பர்களின் உதவியால், வாழ்க்கையில் முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

**மகரம்:-** அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பாரக்கலாம். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். மனதில் நிம்மதியும், உடலில் ஆரோக்கியமும் பெருகும்.

**கும்பம்:-** தெய்வீக ஈடுபாடு, தானதரும சிந்தனைகள் அதிகரிக்கும். தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படும். இனிய பயணங்கள் இன்பம் தரும். புத்திர பாக்கியம் ஏற்படலாம்.

**மீனம்:-** வழக்கு வியாஜ்யங்களை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிந்து நடந்தால் தண்டனைகளைத் தவிர்க்கலாம். நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

## உலக கோடீஸ்வரர்கள் பட்டியல்:

# 2-ம் இடத்திற்கு முன்னேறினார் மெட்டாவின் மார்க் ஸூகர்பெர்க்

**நியூயார்க், அக். 05-**

சொத்து மதிப்பில் அமேசான் நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் ஜெஃப் பிசோஸை முந்தியுள்ளார் மெட்டா சிஇஓ மார்க் ஸூகர்பெர்க். இதன் மூலம் தற்போது உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் அவர் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

ப்ளூம்பெர்க் நிறுவனத்தின் தரவுகளின் படி தற்போது 206 பில்லியன் டாலர்களை நிகர சொத்து மதிப்பாக மார்க் ஸூகர்பெர்க் கொண்டுள்ளார்.

மெட்டாவின் ஏஐ சார்ந்த முதலீடுகள், நிறுவனத்தின் பங்குகள் ஏற்றம் கண்டது, செலவுகளை குறைக்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் போன்றவை இதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதன் மூலம் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் அவர் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

முதல் இடத்தில் உள்ள எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க் 256 பில்லியன் டாலர்களை சொத்து மதிப்பாக கொண்டுள்ளார். அவரை காட்டிலும் 50 பில்லியன் டாலர்கள் தான் மார்க் ஸூகர்பெர்க் பின்தங்கியுள்ளார். மூன்றாம் இடத்தில் உள்ள ஜெஃப் பிசோஸ் 205 பில்லியன் டாலர்களை சொத்து மதிப்பாக கொண்டுள்ளார்.

நடப்பு ஆண்டில் மட்டும் மார்க் ஸூகர்பெர்கின் சொத்து மதிப்பு சுமார் 78 பில்லியன் டாலர்கள் உயர்ந்துள்ளது. உலக அளவிலான 500 கோடீஸ்வரர்களில் நடப்பு ஆண்டில் அதிக வளர்ச்சி கண்டதும் அவர்தான் என ப்ளூம்பெர்க் தெரிவித்துள்ளது. உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் 107 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் முகேஷ் அம்பானி 14-ம் இடத்திலும், 100 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் கவுதம் அதானி 17-ம் இடத்திலும் உள்ளனர்.

டாப் 10 உலக கோடீஸ்வர்கள் பட்டியல் வருமாறு., எலான் மஸ்க் - 256 பில்லியன் டாலர், மார்க் ஸூகர்பெர்க் - 206 பில்லியன் டாலர், ஜெஃப் பிசோஸ் - 205 பில்லியன் டாலர், பெர்னார்ட் அர்னால்ட் - 193 பில்லியன் டாலர், லேரி எல்லிசன் - 179 பில்லியன் டாலர், பில் கேட்ஸ் - 161 பில்லியன் டாலர், லேரி பேஜ் - 150 பில்லியன் டாலர், ஸ்டீவ் பால்மர் - 145 பில்லியன் டாலர், வாரன் பஃபெட் - 143 பில்லியன் டாலர், செர்ஜி பிரின் - 141 பில்லியன் டாலர்.

# நைஜீரியாவில் படகு விபத்து: 60 பேர் பலி - 160 பேர் மீட்பு

**அபுஜா, அக். 05-**

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 100-ஐ தாண்டக் கூடும் என அஞ்சப்படுகிறது.

வடக்கு நைஜீரியாவின் நைஜர் மாநிலம், முண்டி என்ற இடத்தில் வருடாந்திர இஸ்லாமிய திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் பங்கேற்ற சுமார் 300 பேர் நேற்று முன்தினம் இரவு நைஜர் ஆற்றில் ஒரு படகில் கபாஜிபோ என்ற இடம் நோக்கி திரும்பிக் கொண்டிருந்தனர். படகில் ஆண்களை விட பெண்கள் மற்றும் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் இருந்தனர்.

இந்நிலையில் நைஜர் மாநிலத்தின் மோக்வா பகுதியில் இவர்களின் படகு திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. தகவல் அறிந்து மீட்புக் குழுவினரும் தன்னார்வலர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதில் சுமார் 60 பேர் சடலமாக மீட்கப்பட்டனர்.

சுமார் 160 பேர் கரைக்கு நீந்திச் சென்றும் மீட்புக் குழுவால் மீட்கப்பட்டும் உயிர் தப்பினர். இந்நிலையில் எஞ்சிய 80 பயணிகளை காணவில்லை. அவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் தொடர்ந்துஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இந்த விபத்தில் உயிரிழப்பு 100-ஐ தாண்டக் கூடும் என அஞ்சப்படுகிறது.

நைஜீரியாவின் நீர்வழிப் போக்குவரத்தில் அடிக்கடி படகு விபத்துகள் நிகழ்கின்றன. படகுகளை முறையாக பராமரிக்காதது, அளவுக்கு மேல் பயணிகளை ஏற்றுவது ஆகியவை பெரும்பாலும் படகு விபத்துகளுக்கு காரணங்களாக உள்ளன.

இந்நிலையில் தற்போது விபத்துக்குள்ளான படகில் சுமார் 300 பேர் பயணம் செய்த நிலையில், 100 பேர் மட்டுமே அப்படகில் பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# இந்திய பங்குச்சந்தை கடும் வீழ்ச்சி

**மும்பை, அக். 05-**

இந்திய பங்குச்சந்தை கடந்த மாதம் புதிய உச்சத்தை தொட்ட நிலையில் இம்மாத தொடக்கத்தில் இருந்தே சரியத்தொடங்கியது. குறிப்பாக, மத்திய கிழக்கில் போர் பதற்றம் மேலும் விரிவடைந்து வருவதால் சர்வதேச அளவில் பொருளாதார நிலையற்ற தன்மை நிலவி வருகிறது. இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதன் பின்னர் உலக அளவில் பங்குச்சந்தை பெரும் வீழ்ச்சியை சந்தித்தது. அந்த வகையில் இந்திய பங்குச்சந்தை கடந்த சில நாட்களாக சரிவை சந்தித்து வருகிறது.

இந்நிலையில், இந்திய பங்குச்சந்தை நேற்றும் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வர்த்தக தொடக்கத்தில் ஏற்றம்பெற்ற இந்திய பங்குச் சந்தை மதியம் 12.30 மணிக்கு மேல் வீழ்ச்சியடைய தொடங்கியது. அதன்படி, வர்த்தக இறுதியில் நிப்டி 235 புள்ளிகள் சரிந்து 25 ஆயிரத்து 14 என்ற புள்ளிகளில் நிறைவடைந்தது. அதேபோல், சுமார் 400 புள்ளிகள் சரிந்த பேங்க் நிப்டி 51 ஆயிரத்து 460 என்ற புள்ளிகளில் வர்த்தகத்தை நிறைவு செய்தது.

மேலும், 800 புள்ளிகள் வரை வீழ்ச்சியடைந்த சென்செக்ஸ் 81 ஆயிரத்து 690 என்ற புள்ளிகளில் நிறைவடைந்தது. 260 புள்ளிகள்வரை சரிந்த பின் நிப்டி 23 ஆயிரத்து 620 என்ற புள்ளிகளில் வர்த்தகத்தை நிறைவு செய்தது. அதேபோல், 160 புள்ளிகள்வரை வீழ்ச்சியடைந்த மிட்கேப் நிப்டி 12 ஆயிரத்து 810 என்ற புள்ளிகளில் நிறைவடைந்தது. மேலும், 360 புள்ளிகள்வரை சரிவடைந்த பேங்க் எக்ஸ் 58 ஆயிரத்து 392 என்ற புள்ளிகளில் வர்த்தகத்தை நிறைவு செய்துள்ளது.



**திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் தினேஷ் குமார் ஏற்பாட்டில் திருமலை திருப்பதி திருக்குடைகள் மகோத்சவத்தில் மாவட்ட மாணவரணி செயலாளர் டேவிட் ராஜன், ஆன்மீகப் பிரமுகரும், மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளருமான திருவேற்காடு டாக்டர் ச.வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி செயலாளருமான மைக்கேல் ராஜ், மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் மகேந்திரன் திருவேற்காடு நகர ஐ.டி.விங் செயலாளருமான வனராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.**

## நீர்வளத்துறை சார்பில் ரூ.83 கோடி செலவில்
# 19 திட்டப்பணிகளை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, அக். 05-**
முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் 8 மாவட்டங்களில் 83 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள், புனரமைக்கப்பட்ட வாய்க்கால்கள், அணைமறுகட்டுமானப் பணி, புதிய குளம், புதிய அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட 19 நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்.

திருப்பூர், தாராபுரம் வட்டம், கவுண்டையன்வலசு கிராமம் அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே 11 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை, மாம்பாடி-புங்கந்துறை கிராமம் அமராவதி ஆற்றில் 11 கோடியே 56 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை, குன்றத்தூர், கொளப்பாக்கம் கிராமத்தில், கொளப்பாக்கம் கால்வாய் 1 முதல் கொளப்பாக்கம் பொழிச்சலூர் சாலையில் இணைப்பு ஓடை வரை 11 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூடிய வடிவிலான கால்வாய், வாலாஜாபாத், உள்ளாவூர் கிராமத்தின் அருகே தொள்ளாழி மடுவின் குறுக்கே 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டினை திறந்து வைத்தார். உத்திரமேரூர் வட்டம், இருமரம் கிராமத்தின் அருகே புத்தளிமடுவின் குறுக்கே 3 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை, திசையன்விளை, கல்லூரிரெங்கபுரம் கிராமம் பகுதி 2-ல் 4 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய குளம், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் வெள்ள நீர் சூழ்வதை தடுக்கும் வகையில் திருப்பணி கரிசல்குளம் வெள்ள நீரை 3 கோடியே 79 லட்சம் செலவில் முடிவுற்ற நெடுங்குளம், மேகமுடையார் குளம் வழியாக சத்திரம் புதுக்குளம் கண்மாய்க்கு திருப்பும் பணியை திறந்து வைத்தார்.

ஒட்டப்பிடாரம், வடக்கு கல்மேடு கண்மாயில் 1 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணி, தூத்துக்குடி, பேரூரணி அணைக்கட்டில் 1 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணி, தூத்துக்குடி, திருவைகுண்டம், சம்பன்குளம் ஏரியின் வழங்கு வாய்க்காலின் இடது கரையில் 50 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புப் பணிகள், திருச்சி மாவட்டத்தில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு கோட்டத் தலைமையிட உப கோட்டத்துடன் புதிய அலுவலகக் கட்டிடம் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## முதல்வர் இல்லத்தை காலி செய்து
# குடும்பத்துடன் புதிய பங்களாவுக்கு குடிபெயர்ந்த அரவிந்த் கெஜ்ரிவால்

**புதுடெல்லி, அக். 05-**
டெல்லியின் முன்னாள் முதல்வரும், ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால், டெல்லி முதல்வர் இல்லத்தை காலி செய்தார்.

அவர் தனது குடும்பத்துடன் டெல்லியின் ஃபெரோஸ்ஷா சாலையில் உள்ள பங்களாவுக்கு குடிபெயர்ந்துள்ளார். அந்த இடம் ஆம் ஆத்மி கட்சியின் பஞ்சாப் மாநிலத்தின் மாநிலங்களவை உறுப்பினர் அசோக் மிட்டலுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தனது அதிகாரபூர்வ பங்களாவில் வந்து தங்குமாறு கெஜ்ரிவாலுக்கு அசோக் மிட்டல் அழைப்பு விடுத்ததின் பேரில் அவர் அங்கு சென்றுள்ளார் என ஆம் ஆத்மி கட்சியினர் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், நேற்று (அக்.4) டெல்லி முதல்வர் இல்லத்தில் வந்த இலகுரக சரக்கு வாகனம் மூலம் பொருட்கள் ஏற்று செல்லப்பட்டது.

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டெல்லி திகார் சிறையில் இருந்த கெஜ்ரிவால் கடந்த மாதம் 13-ம் தேதி ஜாமீனில் விடுதலையானார். இதையடுத்து ஆம் ஆத்மி கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார். மக்கள் தனக்கு மீண்டும் வாக்களித்த பிறகே முதல்வர் பொறுப்பில் அமர்வேன் என அவர் உறுதியேற்றார். அவர் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ததும், டெல்லி அமைச்சர் ஆதிஷி முதல்வர் பொறுப்பை ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர் கால ஆட்சியில் கட்டப்பட்ட டெல்லி முதல்வர் குடியிருப்பை கடந்த ஆண்டு ஆளும் ஆம் ஆத்மி அரசு சுமார் 45 கோடி ரூபாய் செலவில் புதுப்பித்ததாக புகார் எழுந்தது. அப்போது இதனை காங்கிரஸ் மற்றும் பாஜகவினர் கடுமையாக விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சுரங்க மெட்ரோ ரயில் சேவை:
# மும்பையில் இன்று துவக்கி வைக்கிறார் பிரதமர் மோடி

**மும்பை, அக். 05-**
மும்பையில் சுரங்க மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி இன்று (அக். 5) கொடியசைத்துத் தொடங்கிவைக்கிறார்.

நவராத்திரி பரிசாக பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ் - ஆரே ஜெவிஎல்ஆர் பிரிவு இடையே நகரின் முதல் சுரங்க மெட்ரோ ரயில் சேவையை இன்று முதல் தொடங்க உள்ளது.

மும்பை மெட்ரோ நிர்வாகம் சார்பில் கஃபே பரேடில் இருந்து ஆரே வரை மூன்று கட்டங்களாக மெட்ரோ பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் முதல்கட்ட மெட்ரோ வழித்தடத்தில் (ஆரே முதல் பிகேசி) பணிகள் நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில், நவராத்திரி பரிசாக ரூ.14.120 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி இன்று கொடியசைத்துத் தொடங்கி வைத்து, ரயிலில் பயணம் செய்ய உள்ளார்.

திங்கள்கிழமை முதல் ரயில் சேவைகள் தொடங்க உள்ளது. காலை 6.30 மணி முதல் இரவு 10.30 மணி வரையிலும், நெரிசல் நேரங்களில் சுமார் ஆறு நிமிட இடைவெளியிலும், நெரிசல் இல்லாத நேரத்தில் 15-20 நிமிட இடைவெளியிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் இரவு 10.30 வரை சேவைகள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை சிறைகளில் இருந்து
# 50 தமிழக மீனவர்கள் விடுதலை

**சென்னை, அக். 05-**
இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 50 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாகை, மயிலாடுதுறை துறைமுகங்களில் இருந்து 3 விசைப்படகுகளில் கடந்த மாதம் 21-ம் தேதி 50 பேர் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர். நெடுந்தீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி சிறைபிடித்தனர்.

மேலும் மீனவர்களின் 3 விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்தனர். பின்னர் இலங்கைக்கு கொண்டு சென்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இதையடுத்து கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகளை வலியுறுத்தினார்.

இந்த நிலையில், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட மயிலாடுதுறை மீனவர்கள் 50 பேரை நிபந்தனைகளுடன் விடுதலை செய்து இலங்கை பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் மீனவர்கள் பயன்படுத்திய 3 விசைப்படகுகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இதனால் மீனவர்கள் அனைவரும் விரைவில் தமிழகம் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழகத்தில் விஷக்காய்ச்சல்கள் அதிகரிப்பு:
# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அரசுக்கு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை, அக். 05-**
தமிழகத்தில் அதிகரித்து வரும் விஷக் காய்ச்சல்களை கட்டுப்படுத்தாமலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமலும் வேடிக்கை பார்ப்பதாக, தி.மு.க., அரசுக்கு இ.பி.எஸ்., கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் கடந்த சில நாட்களாக டெங்கு, மலேரியா, ஃப்ளூ போன்ற விஷக் காய்ச்சல்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தினமும் 5,000-த்தைக்கடந்துள்ளதாக ஊடகங்கள் மற்றும் நாளிதழ்களில் செய்திகள் வருகின்றன. குறிப்பாக, இன்றைய நாளிதழ்களில் சென்னையில் வைரஸ் காய்ச்சல் பரவுவதாகவும், அதில் குழந்தைகள், முதியவர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனைகளுக்கு சிகிச்சை பெறுவதற்கு வருவதாகவும் செய்திகள் வந்துள்ளன.

மழைக் காலங்களில் பரவக்கூடிய டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா மற்றும் விஷக் காய்ச்சல் போன்ற நோய்கள் தற்போதே மக்களை தாக்கத் துவங்கி உள்ளதாகவும், பல்வேறு மாவட்டங்களில் டெங்கு போன்ற விஷக் காய்ச்சல்களால் பாதிக்கப்பட்டநோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்கு படையெடுத்து வருவதாகவும், இதனால் பல அரசு மருத்துவமனைகள் நிரம்பி வழிவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிக நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்கு வருவதால், நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றும்; போதுமான மருந்துகள் வழங்கப்படுவதில்லை என்றும்; ஒரு சில அரசு மருத்துவமனைகளில் ஒரே ஊசியை பல நோயாளிகளுக்குப் போடும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும், நேற்றைய ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன.

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகள் இந்த அரசால் வழங்கப்படுவதில்லை என்பதை நான் பலமுறை அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டி இருந்தேன். எனவே, உடனடியாக தமிழக மருத்துவப் பணிகள் கழகம் மூலம் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மேலும், பெரும்பான்மையான அரசு மருத்துவமனைகள் கழிவுநீரால் நிரம்பி வழிவதாகவும், அவை முழுமையாக அகற்றப்படாத நிலையில், அரசு மருத்துவமனைகளே நோய்களை உருவாக்கும் கூடாரங்களாக மாறி உள்ளதாகவும் செய்திகள் வருகின்றன. அரசு மருத்துவமனைகளுக்கு வரும் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் இதனால் மிகவும் பாதிப்படைகின்றனர்.

## அடுத்த 5 ஆண்டுகளில் தனிநபரின் வருமானம் இரு மடங்காக உயரும்
### மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேச்சு

**புதுடெல்லி, அக். 05-**
வரும் பத்தாண்டுகளில் சாமானியர்களின் வாழ்க்கைத் தரம் செங்குத்தான உயர்வை காணும் என்றும், அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியர்களின் தனிநபர் வருமானம் இரு மடங்காக உயரும் என்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நடந்த கவுடிலியா பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன், "இந்தியாவின் பொருளாதார செயல்திறன் கடந்த 10 ஆண்டுகளில் வேகமாக அதிகரித்துள்ளது.

10 வது பெரிய பொருளாதாரமாக இருந்த இந்தியா, கடந்த 5 ஆண்டுகளில் 5-வது பெரிய பொருளாதாரமாக முன்னேறி இருப்பதை நாம் உற்றுநோக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கணிப்புகளின்படி, தனிநபர் வருமானம் $2,730ஐ எட்டுவதற்கு 75 வருடங்கள் எடுத்துக் கொண்டாலும், அதில் மேலும் $2,000ஐச் சேர்க்க ஐந்து வருடங்கள் மட்டுமே தேவைப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியர்களின் தனிநபர் வருமானம் இரு மடங்காகும்.வரவிருக்கும் பத்தாண்டுகளில் சாமானியர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்ந்து நிற்கும்.

இது ஒரு இந்தியன் வாழ்வதற்கான காலத்தை வரையறுக்கும் சகாப்தம்.

தொடர்ச்சியான மோதல்கள், துண்டு துண்டாக பிளவுபட்டு நிற்கும் நாடுகள் என சூழல் மோசமானதாக இருந்தாலும், 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியா, தனது தனி நபர் வருமானத்தை ஒரு சில ஆண்டுகளில் இரட்டிப்பாக்க முயல்கிறது.

உலக அமைதிதான் செழிப்புக்கு ஆதாரம். வருமான சமத்துவமின்மை அளவுகோல் கிராமப்புற இந்தியாவில் 0.283 இலிருந்து 0.266 ஆகவும், நகர்ப்புறங்களில் 0.363 இலிருந்து 0.314 ஆகவும் குறைந்துள்ளது. இந்தியாவில் பொருளாதார சமத்துவம் அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது.

கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் காரணமாகவும், கோவிட் அதிர்ச்சி மங்குவதன் காரணமாகவும் வரும் ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இன்னும் சிறப்பாக வெளிப்படும். இதன் காரணமாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடுகள் தொடரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகளைக் கடக்கும்போது, வளர்ந்த நாடுகளைப் போன்றே புதிய பண்புகளை இந்தியா கொண்டிருக்கம். வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் நோக்கம், கருத்துகள், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சாரத்தின் துடிப்பான பரிமாற்றம் காரணமாக இந்தியர்களுக்கு மட்டுமல்லாது, உலகின் பிற பகுதிகளுக்கும் இந்தியா செழிப்பை ஏற்படுத்தும்." என தெரிவித்தார்.

## அரியானாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் 2 லட்சம் பேருக்கு வேலை
### ராகுல் காந்தி தேர்தல் வாக்குறுதி

**சண்டிகர், அக். 05-**
அரியானாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் 2 லட்சம் பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படும் என ராகுல் காந்தி வாக்குறுதி அளித்துள்ளார்.

90 உறுப்பினர்களைக் கொண்ட அரியானா சட்டசபைக்கு வருகிற இன்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. இந்த நிலையில், அரியானாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் 2 லட்சம் பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படும் என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி வாக்குறுதி அளித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;-

பா.ஜ.க.வால் பரப்பப்பட்ட 'வேலையில்லா திண்டாட்டம்' என்ற நோய், அரியானா இளைஞர்களின் எதிர்காலத்தையும், மாநிலத்தின் பாதுகாப்பையும் நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது. இன்று இந்தியாவிலேயே அரியானாவில்தான் வேலையின்மை விகிதம் மிகவும் அதிகமாக உள்ளது. இதற்கு காரணம், கடந்த 10 ஆண்டுகளில் மாநில இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் ஒவ்வொரு அமைப்பின் முதுகெலும்பையும் பா.ஜ.க. உடைத்துவிட்டது. தவறான ஜி.எஸ்.டி. மற்றும் பணமதிப்பிழப்பு நடவடிக்கை சிறு வணிகங்களை முடக்கியது.

ராணுவத்திற்கு தயாராகும் இளைஞரின் மனஉறுதியை அக்னிவீர் திட்டம் உடைத்தது.மோசமான சட்டங்களால் விவசாய தொழில் செய்பவர்களின் தைரியம் தகர்ந்தது. விளையாட்டு வீரர்களுக்கான ஆதரவு பறிக்கப்பட்டு அவர்களின் கனவு சிதைக்கப்பட்டது. இதன் விளைவாக, போதைப் பழக்கத்தால் இளைஞர்களின் திறமை வீணாகிறது. விரக்தியடைந்த இளைஞர்கள் குற்றத்தில் ஈடுபடுகின்றனர்.

அரியானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைந்த பின்னர், 2 லட்சம் பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு, அரியானா போதையில்லா மாநிலமாக மாற்றப்படும். மாநிலத்தில் வேலைவாய்ப்புகள் பெருகும் என்றும், அனைத்து குடும்பங்களும் செழிப்பாக இருக்கும் என்றும் அரியானாவின் சகோதரிகளுக்கு நான் உறுதியளித்துள்ளேன். இவ்வாறு ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.

# திருப்பதி ஏழுமலையான் கோவில் தங்கக்கொடி மரம் திடீர் சேதம்

**திருப்பதி, அக். 05-**
திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பிரம்மோற்சவ விழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கிய நிலையில் அங்கு கோவில் தங்கக்கொடி மரம் சேதமடைந்துள்ளது பக்தர்களை கவலை அடையச்செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதத்தில் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பிரம்மோற்சவ விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. நேற்று (அக். 4) கொடியேற்றத்துடன் தொடங்கி, வரும் 12ம் தேதி வரை 9 நாட்கள் கோலாகலமாக பிரம்மோற்சவ விழா நடைபெறவுள்ளது. பிரம்மோற்சவ விழாவை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையானுக்கு முதல்வர் சந்திரபாபு நாயுடு பட்டு வஸ்திரம் சமர்ப்பிக்க உள்ளார். இந்த நிலையில், கொடியேற்றத்துக்கான கயிறை கொடிமரத்தின் உச்சியில் பொருத்தும் பணியின்போது தங்கக்கொடி மரத்தின் வளையம் உடைந்ததாக தகவல் வெளியாகின. பின்னர் அதனை சரிசெய்யும் பணியில் தேவஸ்தான அதிகாரிகளும் ஊழியர்கள் ஈடுபட்டனர். நேற்று மாலை கொடியேற்றத்துடன் பிரமோற்சவம் தொடங்கிய நிலையில் தங்கக்கொடி மரம் சேதமடைந்தது குறித்து பக்தர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## ஏதோ பேருக்கு அரசியலுக்கு வந்த கட்சி அல்ல:
# த.வெ.க. மாநாட்டை முன்னிட்டு தொண்டர்களுக்கு விஜய் கடிதம்

**சென்னை, அக். 05**
ஏதோ பேருக்கு அரசியலுக்கு வந்த கட்சி அல்ல என்பதை புரியவைப்போம் என்று த.வெ.க. மாநாட்டை முன்னிட்டு தொண்டர்களுக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

நடிகர் விஜய் கட்சியான தமிழக வெற்றிக் கழக மாநாடு இம் மாதம் 27-ம் தேதி விக்கிரவாண்டியை அடுத்த வி.சாலையில் நடைபெறுகிறது. இம்மாநாட்டுக்கு கடந்த 25-ம் தேதி இரவு காவல் துறை 17 நிபந்தனைகளுடன் அனுமதி அளித்தது. இதையடுத்து நேற்று (அக்.,4) அதிகாலையில் மாநாட்டுக்கான பந்தல் கால் நடும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிலையில், மாநாடு தொடர்பாக விஜய் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், "உங்களை நானும், என்னை நீங்களும் நினைக்காத நாளில்லை. அவ்வளவு ஏன்? நினைக்காத நிமிடம் கூட இல்லை. ஏனெனில், இந்த உறவானது தூய்மையான குடும்ப உறவு. அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்த கடிதம். அதுவும் முதல் கடிதம்.

தமிழக மக்களுக்காக நாம் உழைக்க வேண்டும். இன்னமும், முழுமை பெறாத அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிரந்தரமாகப் பூர்த்தி செய்ய வேண்டும். அதை, அரசியல் ரீதியாக சட்டப்பூர்வமாக, உறுதியாக நிறைவேற்றிக் காட்ட வேண்டும். இதுதான், என் நெஞ்சில் நீண்ட காலமாக அணையாமல், கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே இருக்கும் ஒரு லட்சியக் கனல். நமது முதல் மாநில மாநாட்டுக்கான கால்கோள் விழா இனிதே நடந்தேறி இருக்கிறது. இது மாநாட்டுத் திடல் பணிகளுக்கான தொடக்கம், ஆனால், நம் அரசியல் களப் பணிகளுக்கான கால்கோள் விழா என்பதும் இதில் உள்ளர்த்தமாக உறைந்து கிடக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நம் மாநாடு எதற்காக என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே?

நம் கழகத்தின் முதல் மாநில மாநாடு என்பது நம்முடைய அரசியல் கொள்கைப் பிரகடன மாநாடு. இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமெனில், இது நம்முடைய கொள்கைத் திருவிழா. அதுவும் வெற்றிக் கொள்கைத் திருவிழா. இப்படிச் சொல்லும்போதே, ஓர் எழுச்சி உணர்வு, நம் நெஞ்சில் தொற்றிக்கொள்கிறது. இது, தாய்மண்ணை நிஜமாக நேசிக்கும் அனைவருக்கும் இயல்பாக நிகழ்வதுதான்.

இந்த வேளையில், ஒன்றே ஒன்றை மட்டும் அழுத்தமாகச் சொல்ல வேண்டும் என விரும்புகிறேன். அதை நாம் எப்போதும் ஆழமாக மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். பொறுப்பான மனிதனைத்தான் குடும்பம் மதிக்கும். பொறுப்பான குடிமகனைத்தான் (Citizen) நாடு மதிக்கும். அதிலும் முன்னுதாரணமாகத் (Role model) திகழும் மனிதனைத்தான் மக்கள் போற்றுவர். ஆகவே, நம் கழகத்தினர் இம்மூன்றாகவும் இருக்க வேண்டும் என்பதே என் பெருவிருப்பம்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தொடங்கி, மாநாட்டில் பங்கேற்பது வரை நம் கழகத்தினர் ராணுவக் கட்டுப்பாட்டுடன் இயங்குவர் என்பதை இந்த நாடும் நாட்டு மக்களும் உணர வேண்டும். நாம் உணர வைக்க வேண்டும். நம் கழகம், மற்ற அரசியல் கட்சிகள் போல் சாதாரண இயக்கமன்று. இது ஆற்றல் மிக்கப் பெரும்படை இளஞ் சிங்கப் படை, சிங்கப் பெண்கள் படை, குடும்பங்கள் இணைந்த கூட்டுப் பெரும் படை. ஆகவே, நம்மிடம் உற்சாகம் இருக்கலாம். கொண்டாட்டம் இருக்கலாம். குதூகலம் இருக்கலாம். ஆனால், படையணியினர் ஓரிடத்தில் கூடினால், அந்த இடம் கட்டுப்பாடு மிக்கதாக மட்டுமில்லாமல் பக்குவம் நிறைந்ததாகவும் இருக்கும் என்பதையும் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இவர்களுக்கு அரசியல் என்றால் என்னவென்று தெரியுமா? மாநாடு என்றால் என்னவென்று தெரியுமா? களத்தில் தொடர்ச்சியாக நின்று வென்று காட்ட இயலுமா? இப்படி ஏகப்பட்ட கேள்விகளை நம் மீது வீசுவதில் அதீத விருப்பம் கொண்டவர்களாக சிலர் இருக்கின்றனர். இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டும்போதுதான் அவர்களுக்குப் புரியும். தமிழக வெற்றிக் கழகம் ஏதோ பேருக்கு அரசியலுக்கு வந்த கட்சி அன்று. வீறு கொண்டு எழுந்து அரசியல் களத்தில் வெற்றி காணப் போகின்ற கட்சி என்பதை நம்மை எடைபோடுவோரும் இனி மேல் புரிந்துகொள்வர்.

இந்நிலையில், மாநாட்டுக்கான நாட்களை மனம் எண்ணத் தொடங்கிவிட்டது. உங்களை வெகு அருகில் சந்திக்கப் போகும் சந்தோஷத் தருணங்களை இப்போதே மன அளவிடத் தொடங்கி விட்டது. வி.சாலை எனும் வெற்றிச் சாலையில் விரைவில் சந்திப்போம்." என்று விஜய் கூறியுள்ளார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# தொடர்ந்து உயரும் தங்கம் விலை

**சென்னை, அக். 05-**
கடந்த மாதம் இறுதியில் இருந்து மீண்டும் தங்கம் விலை உயர ஆரம்பித்து இருக்கிறது. அதிலும் கடந்த சில நாட்களாக தாறுமாறாக தங்கம் விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதம் 24-ந்தேதி தங்கம் ஒரு கிராம் ரூ.7 ஆயிரத்தை தொட்டது.

தொடர்ந்து தங்கத்தின் விலை அதிகரித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் தங்கம் விலை சவரனுக்கு ரூ.80 உயர்ந்தது.

இந்த நிலையில் நேற்று தங்கம் விலை மேலும் உயர்ந்து விற்பனையானது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.56,960-க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ரூ.7,120-க்கு விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ரூ.103-க்கு விற்பனையானது.

## மெரினாவில் விமானப்படையின்
# இறுதி ஒத்திகை நிகழ்ச்சியை ரசித்து பார்த்த பொதுமக்கள்

**சென்னை, அக். 05-**
இந்திய விமானப் படையின் 92-ம் ஆண்டு கொண்டாட்டத்தை யொட்டி சென்னை மெரினா கடற்கரையில் நாளை (6-ந்தேதி-ஞாயிற்றுக்கிழமை) விமான சாகச நிகழ்ச்சி நடைபெறுகிறது. அன்று காலை 11 மணிக்கு தொடங்கி நடைபெறும் இந்த சாகச நிகழ்ச்சியை கண்டுகளிப்பதற்காக மெரினா கடற்கரையில் லட்சக்கணக்கானோர் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காணும் பொங்கல் தினத்தில் மேற்கொள்வது போன்று மெரினா கடற்கரை பகுதி முழுவதும் போலீசார் தீவிரமாக கண்காணிக்க உள்ளனர்.விமான சாகச நிகழ்ச்சியை கண்டு ரசிக்க வருபவர்கள் கடலில் இறங்கி குளிக்க வருகிற 6-ந்தேதி தடை விதிக்கப்பட உள்ளது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம், காலையில் இருந்தே மக்கள் மெரினாவில் கூடுவார்கள் என்பதால் அவர்களை ஒழுங்குபடுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விமான சாகச நிகழ்ச்சியையொட்டி 3 நாட்கள் ஒத்திகை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்படி கடந்த 3 நாட்களுக்கு முன் மற்றும் நேற்று முன்தினம் 2 நாட்கள் ஒத்திகை நடத்தப்பட்டது. இதனை பொது மக்கள் கண்டு ரசித்தனர்.

இந்த நிலையில் நேற்று 72 விமானங்கள் பங்கேற்ற பிரமாண்ட ஒத்திகை நடைபெற்றது.

நாளை (6-ம் தேதி) விமான சாகச நிகழ்ச்சி நடைபெறும்போது பங்கேற்கும் அத்தனை விமானப் படை விமானங்களும் ஒத்திகையில் பங்கேற்கின்றன. இந்த ஒத்திகை 3 மணிநேரம் 7 பிரிவுகளாக நடைபெற்றது. இந்த ஒத்திகையின் போது விமானப்படை வீரர்கள் மெய்சிலிர்க்கும் வகையிலும் மயிர்கூச்செரியும் வகையிலும் சாகச நிகழ்ச்சியை செய்து காட்டினர். இந்த ஒத்திகை நிகழ்ச்சியினை பொது மக்கள் வெயிலையும் பொருட்படுத்தாமல் குடையை பிடித்துக்கொண்டு நின்று கண்டுகளித்தனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தொழில் முதலீடுகள், வேலைவாய்ப்பு குறித்த புள்ளி விவரங்களால் தி.மு.க. அரசின் தில்லுமுல்லு அம்பலமாகியுள்ளது. தமிழக அரசு சொல்லிக் கொள்ளும் அளவுக்கு தொழில் முதலீடுகளை ஈர்த்து இருந்தால் அது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். இல்லாவிட்டால் தவறுகளை ஒப்புக்கொண்டு மக்களிடம் வருத்தம் தெரிவிக்க வேண்டும்.
**- அன்புமணி**



நாட்டில் வேலையின்மையால் இந்திய இளைஞர்கள், உயிரைப் பணயம் வைத்து, போர் நடக்கும் பகுதிகளில் வேலை பார்ப்பது, மோடி அரசின் வேலைவாய்ப்புகள் குறித்த கூற்றையும், அவரது தோல்வியையும் காட்டுகிறது. இது மோடி அரசால் இந்தியாவில் நிகழும் பரவலான வேலையின்மையின் விளைவேயாகும்.
**- மல்லிகார்ஜூன கார்கே**



தம்பி விஜய் தனது மாநாட்டு கடிதத்தில் மற்ற கட்சிகளைப் போல் நாம் சாதாரண கட்சி அல்ல என்று குறிப்பிட்டுள்ளார். விஜயின் கட்சி புதிய கட்சி, அவர் கட்சியை உயர்வாக சொல்வதில் தவறில்லை, அதே நேரத்தில் மற்ற கட்சிகளையும் அதன் தலைவர்களையும் அவர் மதிக்க வேண்டும். இப்போது ஒரு குட்டி திராவிட கட்சியைப் போலத் தான் விஜயின் கட்சியும் இருக்கிறது.
**- தமிழிசை**



கடந்த சில மாதங்களில் மட்டும் ஆன்லைன் சூதாட்டத்தில் பணத்தை இழந்த 15 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதே நிலை தொடருவதை தமிழக அரசு வேடிக்கைப் பார்க்கப் போகிறதா? இந்த விவகாரத்தில் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் ஆன்லைன் சூதாட்டத்தடை தொடர்பான வழக்கை விசாரணைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.
**- ராமதாஸ்**

### வேலை வாய்ப்பு குறித்து தி.மு.க கொடுத்த விளக்கம்

# யானை பசிக்கு சோளப்பொறி கொடுத்த கதையாக உள்ளது

### முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு

**திருமங்கலம், அக். 05-**

அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, வருகின்ற 9-ம் தேதி, திமுக அரசை கண்டித்து மாபெரும் உண்ணாவிரத போராட்டம், கழக அம்மா பேரவை செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஆர்.பி.உதயகுமார் தலைமையில் மதுரையில் நடைபெறுகிறது. இந்த உண்ணாவிரதத்தை கழக பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சீனிவாசன், மதுரை மாநகர் மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜு ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர். கழகத் துணை பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சர் நத்தம் இரா. விசுவநாதன், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா ஆகியோர் உண்ணாவிரதத்தை முடித்து வைக்கின்றனர். இதனை தொடர்ந்து இந்த போராட்டத்தில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு 2-ம் நாளாக பயிற்சி முகாம் டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் நேற்று நடைபெற்றது. இதற்கான ஏற்பாட்டினை மாவட்ட அம்மா பேரவை செயலாளர் தமிழழகன் செய்திருந்தார்.



இந்த முகாமில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசியதாவது: இன்றைக்கு புதிய இளம் வாக்காளர்கள் அதிமுகவிற்கு ஆதரவாக மாறி வருகிறார்கள். இளைஞர்களுக் காகவும், மாணவர்களுக்காகவும் அதிமுக ஆட்சி காலத்தில் எண்ணற்ற திட்டங்களை வழங்கினோம். அவற்றை திமுக அரசு நிறுத்திவிட்டது. தற்போது அதிமுகவிற்கு வாக்கு வங்கி குறைந்து விட்டதாக திமுக ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி வருகிறது. கடந்த சட்டமன்ற தேர்தலில் 43 தொகுதிகளில் ஒரு லட்சத்து 93 வாக்குகள் கூடுதலாக பெற்றிருந்தால் அதிமுக மீண்டும் ஆட்சி அமைத்திருக்கும். ஆனால் திமுக மிகப் பெரிய வெற்றியை பெற்றதாக மாய தோற்றத்தை உருவாக்கி விட்டனர். இந்த நாடாளுமன்றத் தேர்தலில் திமுக எண்ணிக்கை பெற்று இருந்தாலும் வாக்கு சதவீதம் குறைந்து தான் உள்ளது. குறிப்பாக அதிமுகவிற்கு இந்த நாடாளுமன்ற தேர்தலில் இரண்டு சதவீதம் வாக்கு வங்கி உயர்ந்துள்ளது. ஆனால் திமுகவிற்கு ஆறு சதவீதம் வாக்கு வங்கி குறைந்துள்ளது. தேர்தல் அறிக்கைபடி இந்த மூன்று ஆண்டுகளில் 30 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் யானைபசிக்கு சோளப் பொறி என்பது போல் திமுகவின் விளக்கம் உள்ளது. இனியும் இந்த ஆட்சி தமிழகத்தில் நீடித்தால் தமிழகத்தை ஆண்டவனால் கூட காப்பாற்ற முடியாது. ஆகவே எடப்பாடியாரை கோட்டைக்கு அனுப்பிடும் வகையில் அவரது கரத்தை வலுப்படுத்த மதுரையில் நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்தில் இளைய சமுதாயத்தினர் அலை அலையாய் பங்கேற்க வேண்டும் என்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மகேந்திரன், தவசி, தமிழரசன், சரவணன், ராஜவர்மன், சதன் பிரபாகரன், மாவட்ட பொறுப்பாளர் தண்டரை மனோகரன், மாநில நிர்வாகிகள் பா.வெற்றிவேல், புளியங்குளம் ராமகிருஷ்ணன், மாவட்ட கழக நிர்வாகிகள் சி.முருகன், வக்கீல் திருப்பதி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் அன்பழகன், கண்ணன், ராமையா, பிரபு சங்கர், ராஜா, ராதா கிருஷ்ணன், மாவட்ட அணி நிர்வாகிகள் சரவண பாண்டி, பேரையூர் ராமகிருஷ்ணன், ரகு, பாஸ்கரன், மகேந்திர பாண்டி, பொதுக் குழு உறுப்பினர் சுமதி சாமிநாதன் கட்சி நிர்வாகிகள் ஆதி (எ) ராஜா, கொடி வைரன், ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் பத்ரகாளியம்மன் கோவிலில் தசரா திருவிழாவை முன்னிட்டு கொடியேற்றம்



**திண்டுக்கல், அக். 05-**

திண்டுக்கல் மலைக்கோட்டை அடிவாரத்தில் அமைந்துள்ள அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவிலில் தசரா பெருவிழா கொடி ஏற்ற நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது.

திண்டுக்கல் மலைக்கோட்டை அடிவாரத்தில் அருள்மிகு பத்திரகாளி அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது இந்த கோவிலில் ஆண்டுதோறும் தசரா பெருந் திருவிழாவானது பத்து தினங் நடைபெறும் . பத்து தினங்களும் பத்திரகாளி அம்மன் ராஜா அலங்காரம், பூ அலங்காரம், ஸ்ரீ பாலாம்பிகை அம்மன் அலங்காரம் ,அர்த்தநாரீஸ்வரர் அலங்காரம், ஸ்ரீ கஜ லட்சுமி அலங்காரம், ஸ்ரீ வித்யா அம்மன் அலங்காரம், ஸ்ரீ காமாட்சி அம்மன் அலங்காரம், ஸ்ரீ மகா துர்க்கை அலங்காரம், ஸ்ரீ சரஸ்வதி அலங்காரம், சிம்ம வாகனத்தில் ஸ்ரீ மகிஷா சூரவர்த்தினி அலங்காரம் என அம்மன் 10 தினங்களும் 10 விதமான அவதாரம் எடுத்து வீதி உலா நிகழ்ச்சியானது நடைபெறும். 12.10.24 அன்று விழாவின் முக்கிய நிகழ்வான மகிஷாசுரன் சூர சம்ஹாரம் வெகு விமர்சையாக நடைபெற உள்ள நிலையில் இன்று கோவிலில் பத்ரகாளி அம்மனின் உருவம் பொறித்த கொடியை சிவனாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கோயிலை சுற்றி வந்து கோவிலில் முன்புறத்தில் அமைந்துள்ள கொடி மரத்தில் தசரா பெருந்திருவிழா கொடியை மேளதாளங்கள் முழங்க கொடியேற்றும் நிகழ்ச்சியானது நடைபெற்றது. இந்தக் கொடியேற்று நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# நத்தம் அருகே கண்டெய்னர் லாரி கவிழ்ந்து விபத்து



**நத்தம், அக். 05-**

மதுரையில் இருந்து சென்னை நோக்கி நத்தம் வழியாக தனியார் பார்சல் சர்வீஸ் கண்டெய்னர் லாரி ஒன்று நேற்று காலை சென்று கொண்டிருந்தது. லாரியை மதுரை பகுதியை குமார் என்பவர் ஓட்டி சென்றார். நத்தம் அருகே துவரங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கல்வேலிபட்டி பிரிவு அருகே சென்று கொண்டிருந்த போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் டிரைவர் குமார் பலத்த காயமடைந்து நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த நத்தம் போலீசார் லாரியை அப்புற படுத்தி போக்குவரத்தை சரி செய்தனர்.

# ஒட்டன்சத்திரம் சக்தி கல்லூரியில் நடந்த சுற்றுச்சூழல் கருத்தரங்கம்

**ஒட்டன்சத்திரம், அக். 05-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் 21 நாட்கள் ஆரோக்கியமான பசுமை வாழ்க்கை வாழ்தல் என்னும் தலைப்பில் நிகழ்ச்சியை கல்லூரியின் தாளாளர் வேம்பணன், கல்லூரியின் முதல்வர் தேன்மொழி தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் நெகிழிப்பையை அறவே அழித்தல், ஆரோக்கியமான இயற்கை உணவு வாரம், மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு, இயற்கை ஆடை , மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு உருவாக்கம், கண்ணாடி தோட்டக்கலை செய்முறை ஆகிய நிகழ்வுகள் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது . இந்நிகழ்வை சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் சிவகாமி, உதவி பேராசிரியை சிவரஞ்சனி, மற்றும் அனைத்து துறை தலைவர்கள் அனைத்து துறை உதவி பேராசிரியர்கள் மாணவிகள் ஒருங்கிணைப்பு செய்தனர்.

### இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமா தமிழகம்?

# பொய் புளுகு மூட்டைகளை உதயநிதி ஸ்டாலின் கூறலாமா?

### மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் கேள்வி

**மதுரை, அக் 05-**

இந்தியாவிற்கே தமிழகம் வழிகாட்டும் மாநிலமாக உள்ளது என்ற தவறான தகவலை கருணாநிதி, ஸ்டாலின், ஆகியோர் வழியில் பொய் புளுகு மூட்டையை உதயநிதி ஸ்டாலின் கூறலாமா? என்று அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் நிருபர்களிடம் கூறியதாவது-

விருதுநகர் மாவட்டத்தின் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் அனைத்து துறைகளுக்கும், இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டு மாநிலமாக உள்ளது என்று ஒரு தவறான தகவலை உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார். நிதி ஆயோக் வெளியிட்ட தகவலில் தேசிய சராசரி விட தமிழகத்தை காட்டிலும் மற்ற மாநிலங்கள் அதிக மதிப்பெண் பெற்றுள்ளது என்பதை அவர் மறைத்துள்ளார். தற்போது நிதி ஆயோக் வெளியிட்ட தகவலில் கடந்த எடப்பாடியார் ஆட்சியோடு தற்போது தி.மு.க ஆட்சியை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகம் பின்நோக்கி தான் உள்ளது. குறிப்பாக எடப்பாடியார் ஆட்சியின் 2020,2021 ஆண்டின் குறியீட்டையும், தற்பொழுது தி.மு.க. அரசின் 2023 ,2024 குறியீட்டையும் எடுத்து வெளியிட்டுள்ளார்கள் குறிப்பாக எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட குறியீட்டில் அப்போது கொரோனா என்பது குறிப்பிடத்தக்கது.

எடப்பாடியார் ஆட்சியில் ஒரு லட்சம் நபர்களுக்கு தற்கொலை விகதத்தில் 17.8 சதவீதம் இருந்தது. தற்போது தி.மு.க. ஆட்சியில் 25.9 சகவீதமாக உயர்ந்து விட்டது. சாலை விபத்தை எடுத்துக் கொண்டால் எடப்பாடியார் ஆட்சியில் 13.88 சகவீதம் இருந்தது தற்போது தி.மு.க. ஆட்சியில் 23.09 சதவீதமாக உயர்ந்து விட்டது. எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மொழிப்பாடம் மற்றும் கணித பாடம் திறன் குறைவு எடுத்துக் கொண்டால் எடப்பாடியார் ஆட்சியில் 67 சதவீதம் இருந்தது. தற்பொழுது 71.3 சகவீதமாக உயர்ந்துவிட்டது. உயர் கல்வி சேர்க்கையில் எடப்பாடியார் ஆட்சியில் 49 சதவீதமாக இருந்தது அதனைத் தொடர்ந்து 2021 ஆண்டின் முடிவில் 51 சதவீதமாக உயர்ந்து இருந்தது தற்போது திமுக ஆட்சியில் 47 சதவீதமாக குறைந்துவிட்டது.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஒரு லட்சம் நபர்களுக்கு எடப்பாடியார் ஆட்சியில் 20.37 சகவீதம் இருந்தது. தற்பொழுது திமுக ஆட்சியில் 33.93 சகவீதமாக உயர்ந்துள்ளது. குழந்தைகள் காணாமல் போவது எடப்பாடியார் ஆட்சியில் 22.37 சகவீதம் இருந்தது தற்போது 33.93 சதவீதமாக உயர்ந்து விட்டது. அதேபோல் திமுக அரசின் முதலமைச்சர் ஸ்டாலின் நிதி ஆயோக் அறிக்கையில் தேசிய சராசரியை ஒப்பிட்டு, அதில் தமிழகம் தேசிய சராசரி காட்டிலும் அதிக மதிப்பீடு பெற்றதாக விளம்பரபடுத்தி வருகிறார். ஆனால் உண்மை என்னவென்றால் தேசிய சராசரியை காட்டிலும் மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டை காட்டிலும் மதிப்பீட்டை அதிமாக பெற்று முதலிடத்தில் உள்ளதை மறைத்து விட்டார்.

இந்தியாவிற்கே தமிழகம் வழிகாட்டும் மாநிலமாக உள்ளது என்ற தவறான தகவலை கருணாநிதி, ஸ்டாலின், ஆகியோர் வழியில் பொய் புளுகு மூட்டையை உதயநிதி ஸ்டாலின் கூறலாமா?. பசிப்பிணி அகற்றலில் தேசிய சராசரி 52 சகவீதம் தான் ஆனால் தமிழகம் 75 சகவீதம் பெற்றதாக கூறுகிறார். ஆனால் இதே கேரளாவில் எடுத்துக் கொண்டால் 84 சதவீதம் ,பஞ்சாப் 83 சதவீதம், அருணாச்சல பிரதேசம் 81 சகவீதம், மணிப்பூர் 77 சதவீதம், சிக்கிம் 77 சகவீதம், மிசோரம் 76 சகவீதம், அரியானா 75 சகவீதம் என்று மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகம் ஆறாவது இடத்தில் தான் உள்ளது. தரமான கல்வியில் தேசிய சராசரி 61 சகவீதம் இதில் தமிழ்நாடு 76 சகவீதம் என்று ஒப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கேரளாவில் எடுத்துக் கொண்டால் 82 சகவீதம், ஹரியானா 77 சகவீதம், இமாச்சலப் பிரதேசம் 77 சகவீதம் அதற்கு பின்பு தான் தமிழ்நாடு 3வது இடத்தில் உள்ளது. தூய்மையான குடிநீரில் தேசிய சராசரி 89 சகவீதம், ஆனால் தமிழ்நாடு 89 சகவீதம் பெற்றதாக கூறப்படுகிறது ஆனால் கோவா எடுத்துக் கொண்டால் 100 சகவீதம், இமாச்சலப் பிரதேசம் 99 சகவீதம், பீகார் 98 சதவீதம், சிக்கிம் 97 சதவீதம், மிசோரம் 94 சதவீதம், உத்தரகாண்ட் 94 சதவீதம், சதீஸ்கர் 93 சதவீதம், மகாராஷ்டிரா 93 சதவீதம், உத்திரபிரதேசம் 93 சதவீதம், ஆந்திரா 91 சகவீதம், கர்நாடகா 90 சகவீதம் என தமிழ்நாடு 9 வது இடத்தில் தான் உள்ளது.

தொழில் வளர்ச்சி மற்றும் உள்கட்ட வசதிகளில் தேசிய சராசரி 61 சகவீதம் இதில் தமிழகம் 67 சகவீதம் உள்ளது கோவா 76 சகவீதம், அரியானா 72 சகவீதம், கேரளா 69 சகவீதம் பஞ்சாப் 69 சகவீதம், இதில் தமிழ்நாடு நான்காவது இடத்தில் உள்ளது. சமத்துவமின்மையை குறைத்தலில் தேசிய சராசரி 65 சகவீதம் தமிழ்நாடு 76 சதவீதம் உள்ளது கோவா 87 சதவீதம், இமாச்சலப் பிரதேசம் 80 சதவீதம், சிக்கிம் 80 சதவீதம், மணிப்பூர் 79 சதவீதம், மேகாலயா 77 சதவீதம், பஞ்சாப் 77 சகவீதம், திரிபுரா 77 சகவீதம் இதில் தமிழகம் 5 வது இடத்தில் உள்ளது. விஞ்ஞான ரீதியில் ஊழல் செய்த திமுக அரசு தற்போது நிதி ஆயோக் குறியீட்டில் தமிழகத்தில் தமிழகம் முதலிடத்தில் இருப்பது போல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கிய உதயநிதி ஸ்டாலின் அதனை மக்கள் நம்ப மாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# நத்தத்தில் மினிவேன் மோதி விவசாயி படுகாயம்

**நத்தம், அக். 05-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே அரவங்குறிச்சியை சேர்ந்தவர் குமார் (45). விவசாயி. இவர் நேற்று முன்தினம் காலை தனது பைக்கில் தனது தோட்டத்தில் விளைந்த கொய்யாப்பழங்களை நத்தத்தில் உள்ள கமிஷன் கடையில் போட்டுவிட்டு ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். நத்தம் யூனியன் அலுவலகம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே காசம்பட்டியை சேர்ந்த ரமேஷ் என்பவர் ஓட்டி வந்த மினிவேன் பைக் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட குமாருக்கு நெற்றி, தலை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆபத்தான நிலையில் அக்கம் பக்கத்தினர் மீட்டு அவரை நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



**மதுரை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரோட்டரி கிளப் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய, கணவனை இழந்த பெண்களுக்கு இ-ஆட்டோக்களுக்கான சாவியை கலெக்டர் சங்கீதா வழங்கினார். ஆனந்தஜோதி, கண்ணன் ஆகியோர் உள்ளனர்.**

# வில்வித்தை, துப்பாக்கி சுடும்போட்டியில் ராமநாதபுரம் பள்ளி மாணவர்கள் சாதனை




**ராமநாதபுரம், அக். 05-**

வில்வித்தை மற்றும் துப்பாக்கி சுடும் போட்டியில் ராமநாதபுரம் பள்ளி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். ராமநாதபுரம் நேசனல் அகாடமி பள்ளியில் 10-ம் வகுப்பு பயிலும் மாணவன் ஸ்ரீசரண் கொல்கத்தாவில் தேசிய அளவில் நடைபெற்ற வில்வித்தை போட்டியில் 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் பங்கேற்று 3-வது இடம் பிடித்து சாதனை படைத்துள்ளான். மாணவன் ஸ்ரீசரண் குஜராத் மாநிலத்தில் அடுத்த மாதம் நடைபெற உள்ள தேசிய அளவிலான வில்வத்தை போட்டியில் பங்கேற்க தேர்வு செய்யப் பட்டுள்ளான் என்பது குறிப்படத்தக்கது. இதேபோல சென்னை நேரு பார்க்கில் மாநில அளவில் நடைபெற்ற வில்வித்தை போட்டியில் 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் ராமநாதபுரம் இன்பன்ட் ஜீசஸ் பள்ளியில் 10-ம் வகுப்பு படிக்கும் மாணவி லோக ப்ரியா 2-ம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இவர் குஜராத் மாநிலத்தில் அடுத்த மாதம் நடைபெற உள்ள தேசிய அளவிலான வில்வித்தை போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். மதுரை ரைபில் கிளப்பில் மாநில அளவில் நடைபெற்ற துப்பாக்கி சுடுதல் போட்டியில் 19 வயதுக் குட்பட்டோருக்கான பிரிவில் ராமநாதபுரம் செய்யது அம்மாள் மெட்ரிக் பள்ளி 12-ம் வகுப்பு மாணவி தேஜாஸ்ரீ 3-ம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இவர் அடுத்த மாதம் போபால் மாநிலத்தில் நடக்க உள்ள தேசிய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேற்கண்ட மாணவ மாணவிகள் ராமநாதபுரம் மெனு ஸ்போர்ட்ஸ் அகாடமியில் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய போட்டியில் விளையாட தேர்வு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ள மாணவ மாணவிகளை ராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு அலுவலர் தினேஷ், மெனு ஸ்போர்ட்ஸ் அகடமி தாளாளர் செந்தில்குமார், பயிற்சியாளர் மது ப்ரீத்தா, துணை பயிற்சியாளர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் பாராட்டினர்.

# செந்துறை: வீட்டின் மீது புளியமரம் சாய்ந்து விபத்து




**நத்தம், அக். 05-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சேத்தூர் ஊராட்சி சொறிப்பாறைப்பட்டியை சேர்ந்தவர் கனகராஜ் (32) இவரது வீட்டின் அருகில் பழமை வாய்ந்த புளியமரம் கீழே விழும் நிலையில் இருந்தது. இது குறித்து வருவாய்த்துறையினரிடம் பலமுறை புகார் அளித்துள்ளார். ஆனால் எந்த வித நடவடிக்கையும் எடுக்கபடவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை சேத்தூர் சுற்றுவட்டார பகுதியில் பலத்த காற்றுடன் பெய்த மழையால் புளியமரம் வேரோடு சாய்ந்து அந்த பகுதியில் உள்ள வீட்டின் மீது விழுந்தது. அந்த சமயத்தில் வீட்டில் யாரும் இல்லாததால் பெரும் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த வருவாய்த்துறையினர் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

### அரசபிள்ளை பட்டியில்

# நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தடுப்பணை: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



**ஒட்டன்சத்திரம், அக். 05-**

அரசப்பிள்ளை பட்டியில் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தடுப்பணையை முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் அரசப்பிள்ளை பட்டியில் நீர்வளத்துறை சார்பில் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தடுப்பணை ரூ 2.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது. இந்தத் தடுப்பணையின் மூலம் சுற்றியுள்ள கிராமங்களில் 487.38 ஏக்கர் நிலங்கள் நீர்பாசன வசதி பெறுவதோடு, 41 ஆழ்குழாய் கிணறுகள் செறிவூட்டப்பட்டு நிலத்தில் நீர்மட்டம் உயர்ந்து காணப்படுவது, கிராம மக்களின் குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யும் வகையில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. கட்டப்பட்ட தடுப்பணையை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இதனையடுத்து தடுப்பணையில் பூ துவி பொதுமக்கள் நீரினை வரவேற்றனர். நிகழ்வில் ஊராட்சி மன்ற தலைவர்கள் செல்வராஜ், சக்திவேல், துணைத் தலைவர் சுரேஷ்குமார், ஊராட்சி செயலர் வேலுச்சாமி, கண்காணிப்பு பொறியாளர் மாரியப்பன், விஜய மூர்த்தி, உதவிப் பொறியாளர் ராஜசேகரன், ஊராட்சி செயலாளர் முருகேசன் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். அதே போல் ஒட்டன்சத்திரம் வட்டம் தாசரிபட்டியில் முத்து பூபாலசமுத்திரம் குளக்கரையில் ரூ.3 கோடி 54 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அணைக்கட்டையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் நேற்று திறந்து வைத்தார்.



**விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி நிர்வாகப் பணிகளின் முன்னேற்றம், நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், அதனுடைய தற்போதைய நிலை குறித்து தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் கலெக்டர் ஜெயசீலன் ஆய்வு செய்து அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.**

## திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில்
# நடிகர் ரஜினிகாந்த் பூரண உடல் நலம் பெற வேண்டி கொலு அமைத்து சிறப்பு வழிபாடு



**திருமங்கலம், அக். 05-**

திருமங்கலம் நகர் பேருந்து நிலையம் அருகில் ரஜினிகாந்தின் தீவிர பக்தரும், முன்னாள் ராணுவ வீரருமான எஸ்.கார்த்திக் என்பவரது ஏற்பாட்டின் பேரில் இந்தியாவிலே முதல் முறையாக கருங்கல்லினால் ஆன மூன்றடி உயர மூலவர் ரஜினிகாந்த் சிலை அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் தினமும் பூஜைகள் நடைபெற்று வருகிறது. ரஜினி பக்தர்களின் ஆன்மீக திருத்தலமாக திகழ்ந்திடும் இங்கு மூலவர் ஸ்ரீரஜினியின் திருவுருச்சிலைக்கு முன்புறமுள்ள பீடத்தில் ஒன்றரை அடி உயரமும், 50கிலோ எடையில் கருங்கல்லினால் ஆன கமுகு சிலை நிறுவப்பட்டுள்ளது. ரஜினி பக்தர்கள் தங்களது இல்ல நிகழ்வுகளில் முதல் அழைப்பிதழை திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில் வைத்து வழிபட்டுச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல்நலக் குறைவு காரணமாக சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ரஜினிகாந்த் பூரண உடல் நலம் பெற்று நீண்ட ஆயுளுடன் மக்களுக்கு சேவையாற்றிட வேண்டி திருமங்கலம் அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் பிரமாண்டமான முறையில் சிறப்பு கொலு அமைத்து வழிபாடு செய்யப்பட்டது. இந்த கொலுவில் ரஜினிகாந்த் நடித்த முதல் படமான அபூர்வ ராகங்கள் முதல் தற்போதைய கூலி படம் வரையிலான 171 திரைப்படங்களின் புகைப்படங்களை பொம்மைகளாக வெள்ளை சிமெண்ட் மற்றும் களிமண் பொம்மைகளாக வடிவமைத்து வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலே முதல் முறையாக புதுமையான முறையில் ரஜினிகாந்தின் 171 பொம்மைகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த கொலு கோவிலுக்கு வழிபட வருபவர்களை பெரிதும் கவர்ந்து வருகிறது.

இதனிடையே ரஜினிகாந்த் பூரண உடல்நலம் பெற்று பல்லாண்டு காலம் வாழ்ந்திட வேண்டி திருவாச்சியும், நாககிரீடமும் சூட்டப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்து வரும் மூலவர் ரஜினிகாந்தின் திருவுருவச் சிலைக்கு பால், பன்னீர், புஷ்பம், சந்தனம், இளநீர் உள்ளிட்ட பல்வேறு பொருட்களால் அபிஷேகம் செய்தது டன் கொலுவின் முன்பாக சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. இந்த வழிபாடு நிகழ்வுகளில் ரஜினியின் தீவிர பக்தரும், முன்னாள் ராணுவ வீரரும், திருமங்கலம் அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலின் நிறுவனருமான எஸ்.கார்த்திக் மற்றும் அவரது குடும்பத்தினர், ரஜினி பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இதனை தொடர்ந்து சிறப்பு வழிபாட்டில் பங்கேற்ற அனைவருக்கும் அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலின் சார்பில் சுண்டல் பிரசாதமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு தொடர்பாக திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனர் எஸ்.கார்த்திக் செய்தியாளர்களிடம் கூறுகையில் நவராத்திரி பண்டிகையின் போது கொலு வைத்து வழிபடும் காலமான தற்போது மனிதகடவுள் ரஜினிகாந்த் பூரண உடல் நலத்துடன் நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்திட வேண்டி திருமங்கலம் நகரிலுள்ள ஸ்ரீ ரஜினி கோவிலில் அவர் நடித்த 171 திரைப்படங்களின் புகைப்படங்களை பொம்மைகளாக வடித்து பிரமாண்ட கொலு அமைத்து வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது.

இறைவனின் அருளாலும், அவரது பக்தர்களின் அன்பினாலும் ரஜினிகாந்த் முழுமையாக குணமடைந்து விடு திரும்பியுள்ளார் என்றும் அவரது அழைப்பிற்காக தான் ஆவலுடன் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். இந்த நிகழ்வு ரஜினியின் தீவிர ரசிகர்கள் மற்றும் பக்தர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மதுரை ஆதினத்திடம் பணம் கேட்டு மர்ம நபர்கள் மிரட்டல்

**மதுரை, அக். 05-**

மதுரை ஆதினத்திடம் பணம் கேட்டு மிரட்டல் விடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

வைகை நதியை சீரமைக்க, நாள் ஒன்றுக்கு 15,000 ரூபாய் கேட்டு மிரட்டல் வருவதாக அவர் தெரிவித்தார். அடையாளம் தெரியாத, நேரில் வந்த மூன்று நபர்கள் பணம் தர வேண்டும் என மிரட்டல் விடுத்துள்ளனர். ஆதினம் தரப்பில் பணம் தர மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனே அந்த மூன்று பேர் மதுரை ஆதினத்தை தரக்குறைவாக பேசியுள்ளனர்.

"வைகை நதியை சுத்தம் செய்வது மிகப்பெரிய பணி. அதை இவர்கள் எப்படி செய்ய முடியும்?" எனவும் ஆதினம் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மிரட்டல் தொடர்பாக காவல்துறையினரிடம் புகார் அளிக்க விருப்பமில்லை என ஆதினம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# முதுகுளத்தூர் அருகே 66-ம் ஆண்டு முளைப்பாரி திருவிழா



**முதுகுளத்தூர், அக். 05-**

முதுகுளத்தூர் வட்டம் சூரங்குளம் கிராமத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் ஸ்ரீவாழ வந்தாள் அம்மன் ஆலய முளைப்பாரி திருவிழா 66ஆம் ஆண்டாக வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. திருவிழா கடந்த வாரம் காப்புக்கட்டும் நிகழ்வுடன் துவங்கியதை தொடர்ந்து பெண்கள்முளைப்பாரிகளை வளர்க்க துவங்கினர். ஒருவாரமாக நடைபெற்ற விழாவில் பெண்கள் பாரம்பரிய முறைப்படி கும்மி கொட்டியும், ஆண்கள் ஒயிலாட்டம் ஆடியும் விழாவினை சிறப்பித்தனர். பெருந்திரளான சுற்றுவட்டார கிராமமக்கள் கலந்து கொண்டனர். விழாவை கிராம மக்கள் மற்றும் ஸ்ரீ தர்மமுனீஸ்வரர் நற்பணி மன்றத்தினர் சிறப்பாக நடத்தினர். பாரம்பரிய முறைப்படி ஆண்டுதோறும் நடைபெறும் விழா முடிந்ததும் பருவமழை நன்றாக பெய்து விவசாயம் செழிக்கும் என்பது சுற்றுவட்டார மக்களின் நம்பிக்கையாக உள்ளன.





**மதுரை மாநகர் வடக்கு 2-ம் பகுதி 15-வது வார்டு கிழக்கு வட்ட அ.தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் புதூர் உதயகுமார் தலைமையில் டி.ஆர்.ஓ. காலனி பகுதியில் நடைபெற்ற நிர்வாகிகள் மற்றும் புதிய உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பகுதி செயலாளர் வி.கணேசன் பேசினார். இதில் நிர்வாகிகள் முருகன், மாரிமுத்து, ராஜகோபால், சிவா, முகமது நாசர், பழனி, நாகசுந்தரம், அப்துல்லா, பாபு, முத்துராமன், குமார், கார்த்தி, சரவணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**



**தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று கல்லூரி முதல்வர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு, பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப்பொருட்கள் தடுப்பதற்கான விழிப்புணர்வு கூட்டம் கலெக்டர் ஆர்.வி.ஷஜீவனா தலைமையில் நடைபெற்றது.**

# அமேசான் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் 2024 முதல் 48 மணி நேரத்தில் 11 கோடி வாடிக்கையாளர்கள் வருகை

**திருச்சி, அக் 05-**

அமேசான் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் 2024 முதல் 48 மணி நேரத்தில் 11 கோடி வாடிக்கையாளர்கள் வருகை தந்துள்ளார்கள், 80% பேர் அடுக்கு 2 மற்றும் சிறிய நகரங்களில் இருந்து வந்துள்ளனர். இதுகுறித்து அமேசான் இந்தியாவின் துணைத்தலைவர் சவுரப் ஸ்ரீவஸ்தவா உடன் தேநீர் சந்திப்பு மேற்கொண்டோம்.

அமேசான் இந்தியாவின் மிகப்பெரிய ஷாப்பிங் நிகழ்வு இப்போது நேரலையில் உள்ளது. இதுவரை வாடிக்கையாளர்களின் பதில் குறித்த சில முக்கிய நுண்ணறிவுகளைப் பகிர முடியுமா? இந்த நிகழ்வின் முதல் 48 மணிநேரம், 11 கோடிக்கும் அதிகமான வருகைகள் மேடையில் பதிவுசெய்யப்பட்டதன் மூலம், தனித்தன்மை வாய்ந்ததாக இல்லை. நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து, குறிப்பாக அடுக்கு 2 மற்றும் 3 நகரங்களில் இருந்து, இந்த காலகட்டத்தில் எங்கள் மொத்த விற்பனையில் 65%க்கும் அதிகமான பதிலைப் பெற்றுள்ளோம். இந்த ஆரம்ப கட்டங்களில், ஸ்மார்ட்போன்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், ஃபேஷன் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் போன்ற பிரிவுகள் ஈர்க்கக்கூடிய தேவையைக் காட்டியுள்ளன.

இந்த பண்டிகைக் காலத்தில் அனைத்து பின் குறியீடுகளிலும் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற ஷாப்பிங் அனுபவத்தை அமேசான் உறுதிசெய்கிறதா? அமேசான் இந்தியாவால் நியமிக்கப்பட்ட இப்சோஸ் ரிசர்ச் பிரைவேட் லிமிடெட் நடத்திய ஆய்வில், இந்த ஆண்டு வாடிக்கையாளர்கள் பண்டிகை ஷாப்பிங் உயர்வுக்கு ஆர்வமாக உள்ளனர். பதிலளித்தவர்களில் 89% பேர் வரவிருக்கும் விழாக்களுக்கான தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தினர், 71% பேர் ஆன்லைனில் ஷாப்பிங் செய்ய விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளனர். Amazon.in ஒரு விருப்பமான ஆன்லைன் ஷாப்பிங் இடமாக உருவெடுத்தது, பதிலளித்தவர்களில் 73% க்கும் அதிகமானோர் தங்கள் பண்டிகைத் தேவைகளுக்காக Amazon ஐ நம்பியுள்ளனர்.

# கொலை வழக்கில் தொடர்பு: திண்டுக்கல்லில் ரவுடியை சுட்டுப்பிடித்த போலீசார்

**திண்டுக்கல், அக். 05-**

திண்டுக்கல்லில் ரவுடி கொலை வழக்கில் நீதிமன்றத்தில் சரணடைந்த இருவர் உள்பட 6 பேர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ள நிலையில், காவலரை தாக்கிவிட்டு தப்பிச் செல்ல முயன்ற ரௌடி ரிச்சர்ட் சச்சினை தனிப்படை போலீசார் முழங்காலில் சுட்டுப் பிடித்தனர்.

திண்டுக்கல் பேகம்பூர் பகுதியைச் சேர்ந்தவர் ச. முகமது இர்பான் (24). கொலை உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய இவர், தனது நண்பர்கள் முகமது அப்துல்லா (24), முகமது மீரான் (22) ஆகியோருடன், திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே கடந்த சனிக்கிழமை இரவு சென்று கொண்டிருந்தார். அப்போது முகமது இர்பானை மர்ம நபர்கள் அரிவாளால் வெட்டிக் கொலை செய்தனர். அவருடன் சென்ற முகமது அப்துல்லா காயமடைந்தார்.

இதுதொடர்பாக திண்டுக்கல் வடக்கு காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இந்த நிலையில், முத்தழகுப்பட்டியைச் சேர்ந்த தனசாமி மகன் ரிச்சர்ட் சச்சின் (26), அருள்ராஜ் மகன் மார்ட்டின் நித்திஷ் (27), செல்வராஜ் மகன் எடிசன் சக்கரவர்த்தி (24), மாரம்பாடியைச் சேர்ந்த செபஸ்தியார் மகன் பிரவீன் லாரன்ஸ் (29) ஆகியோரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர். இதனிடையே, முத்தழகுப்பட்டியைச் சேர்ந்த எடிசன்ராஜ் (25), சைமன் செபஸ்தியார் (23) ஆகிய இருவரும், திண்டுக்கல் 2-ஆவது குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றத்தில் வியாழக்கிழமை சரணடைந்தனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ள ரௌடி ரிச்சர்ட் சச்சின் பதுக்கி வைத்துள்ள ஆயுதங்களை பறிமுதல் செய்வதற்காக, தனிப்படை போலீசார் மாலைப்பட்டி சுடுகாடு பகுதிக்கு அழைத்துச் சென்றபோது, காவலர் அருணை அரிவாளால் தாக்கிவிட்டு தப்பிச் செல்வதற்கு முயன்றபோது, தற்காப்புக்காக தனிப்படை போலீசார் ரிச்சர்ட் சச்சின் முழங்கால் பகுதியில் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தனர். காவல் அருண், ரௌடி ரிச்சர்ட் சச்சின் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரம் மனிதனின் உரம்

# கவனமீர்க்கும் ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் வங்கியின் புதிய அறிவிப்பு

**சென்னை, அக் 05-**

ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் வங்கியுடன் ஐடிஎஃப்சி லிமிடெட் இணைவது முடிந்ததாக, மற்றும் இந்த இணைப்பு அக்டோபர் 01, 2024 முதல் அமலுக்கு வருவதாக, இன்று நடைபெற்ற அதன் வாரியக் கூட்டத்தில் ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் வங்கி அறிவித்தது. இணைப்பின் விளைவாக, பதிவு தேதியின் நிலவரப்படி அக்டோபர் 10, 2024 அன்று ஐடிஎஃப்சி லிமிடெட்டில் அத்தகைய பங்குதாரர் வைத்திருக்கும் ஐடிஎஃப்சி லிமிடெட்டின் ஒவ்வொரு 100 ஈக்விட்டி பங்குகளுக்கும் வங்கியின் 155 பங்குகள் ஒதுக்கப்படும். ஒழுங்குமுறை செயல்முறைகள் மற்றும் அனுமதிகளுக்கு உட்பட்டு, இந்த பங்குகள் அக்டோபர் 31, 2024 அன்று அல்லது அதற்கு முன்னர் ஐடிஎஃப்சி லிமிடெட் பங்குதாரர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் வங்கியுடன் ஒருங்கிணைக்கப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகள் பின்வருமாறு: எளிதாக்கப்பட்ட கார்ப்பரேட் க்ட்டமைப்பு: ஒருங்கிணைப்புக்குப் பிறகு, எந்த உடைமை நிறுவனமும் இல்லாத எளிதாக்கப்பட்ட கார்ப்பரேட் கட்டமைப்பு வங்கியில் கிடைக்கும். ஈவுத்தொகை செலுத்தும் தகுதி: வங்கி அதன் ஆரம்ப ஆண்டுகளில் பெரும்பாலும் மரபு உள்கட்டமைப்பு மற்றும் கார்ப்பரேட் கடன் கணக்குகள் மற்றும் நல்லெண்ணத் தள்ளுபடி காரணமாக ஏற்பட்ட இழப்புகள் காரணமாக, வங்கிக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதன் விளைவாக பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை செலுத்தும் வங்கியின் திறன் கட் டுப் ப டுத் தப் பட் டது. இணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, வங்கியின் செக்யூரிட்டி பிரீமியம் கணக்கிற்கு எதிராக வங்கியின் திரட்டப்பட்ட இழப்புகள் சரிசெய்யப்படும். இது எதிர்காலத்தில் ஈவுத்தொகையை செலுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராய வங்கிக்கு உதவும். ஒழுங்குமுறை இணக்கங்களை ஒன்றாக்குதல் மற்றும் நெறிமுறைப்படுத்துதல். இந்தியா வேகமாக வளர்ந்து வரும் நாடு, மற்றும் இந்த வளர்ச்சி அடுத்த இரண்டு தசாப்தங்களில் மகத்தான வாய்ப்புகளை முன்வைக்கும்.

ஏற்கனவே எளிதாக்கப்பட்ட பங்குதாரர் மற்றும் கார்ப்பரேட் கட்டமைப்பு, வலுவான திறன்கள் மற்றும் பிராண்டின் வளர்ச்சி மற்றும் உலகளாவிய வங்கியின் தரத்தில் வழங்கப்படும் முழுமையான சேவைகள் வங்கியின் உள்ளதால், மற்றும் அத்துடன் இந்தியா வழங்கும் பெரும் வாய்ப்புகளும் சேரும்போது வங்கி வளர்ச்சியடையும் நிலையில் நன்றாக அமைந்துள்ளது..

# மருந்துப் பூச்சுடைய பலூன்கள் இதயப் பராமரிப்பை மாற்றுகின்றன ஆஞ்சியோபிளாஸ்டியில் ஒரு முக்கிய மைல்கல்

**மதுரை, அக் 05-**

இதய ரத்தக்குழாய் நோய் இந்தியாவில் இளம் வயதினரை அதிகம் பாதிக்கிறது, சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, கடந்த பத்தாண்டுகளில் 30 மற்றும் 40 வயதுடையவர்களிடையே இந்த நோயானது 25% அதிகரித்துள்ளது.அதிக நேரம் அமர்ந்து செய்யும் வேலை , மோசமான உணவுப் பழக்கம் மற்றும் அதிகரித்து வரும் மன அழுத்த அளவுகள் ஆகியவை முக்கியக் காரணிகளாகப் பார்க்கப்படுகிறது. அதிக நேரம் அமர்ந்து செய்யும் வேலை, மோசமான உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் அதிக அளவு மன அழுத்தம் ஆகியவை CAD நோய் அதிகரிப்புக்கு முக்கியக் காரணிகளாகும். கூடுதலாக, உடல் பருமன் மற்றும் நீரிழிவு போன்ற காரணிகளினால் பாதிப்பு கடுமையாக அதிகரித்து வருகிறது.மருந்துப் பூச்சுடைய பலூன்கள் CAD இன் நிர்வாகத்தில் ஒரு பெரிய முன்னேற்றத்தைக் குறிக்கின்றன.

இது குறித்து மதுரையில் உள்ள ப்ரீத்தி மருத்துவமனையின் புகழ்பெற்ற இதயச் சிகிச்சை நிபுணர் டாக்டர் பி.சங்கர் கூறுகையில், சிக்கலான ரத்தக் குழாய் (CAD) நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதில் மருந்துகளை வெளியேற்றும் பலூன்கள் குறிப்பிடத்தக்க பலன்களைக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, நான் சமீபத்தில் பலஸ்டென்ட் பொருத்தப்பட்ட பல்வேறு நிலையான அடைப்புகளையுடைய 48 வயதான நோயாளிக்குச் சிகிச்சை அளிக்க நேர்ந்தது. டிஇபி-ஐப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட பகுதிக்கு நேரடியாக இலக்கை நோக்கி ,மருந்துகளை வழங்க முடிந்தது.நோயாளி, அறிகுறிகளில் கணிசமான அளவு குறைவதையும் மற்றும் சிறந்த ரத்தக் குழாய் குணப்படுத்துதலையும் அனுபவித்தார், ரீஸ்டெனோசிஸின் அறிகுறிகள் எதுவும் இல்லை என்பதை ரெகுலர் ஃபாலோ அப்-ல் கண்டறிந்தோம் என்று கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நவராத்திரி விழாவை முன்னிட்டு பழனி முருகன் கோயிலில் கட்டுப்பாடு

**மதுரை, அக். 05-**

நவராத்திரி விழாவை முன்னிட்டு பழனி முருகன் கோயிலில் தரிசனம் செய்ய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில், ஆண்டு தோறும் நவராத்திரி விழா விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நவராத்திரி விழாவையொட்டி காப்புக்கட்டும் நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றறது.

மலைக் கோயிலில் வருகிற 11-ஆம் தேதி ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜையும், மறுநாள் 12-ஆம் தேதி விஜயதசமி அன்று அம்புவில் போடுதலும் நடைபெறுகின்றன. விழா நாள்களில் பெரியநாயகியம்மன் கோயிலில் சிறப்பு அபிஷேக, அலங்காரமும், ஆன்மிக சொற்பொழிவும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இந்நிலையில், நவராத்திரி விழாவை முன்னிட்டு பழனி முருகன் கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய கட்டுப்பாடு விதிக்கப்பட்டு பழனி கோயில் நிர்வாகம் சார்பில் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில், நவராத்திரி விழாவில் அம்பு போடுதல் நிகழ்ச்சி 12-ஆம் தேதி விஜயதசமி அன்று நடைபெறுவதால் அன்று பக்தர்களுக்கு தரிசன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது அன்று காலை 11.30 மணி முதல் அனைத்து தரிசனக் கட்டண சீட்டுகள் வழங்குவது நிறுத்தப்படும். எனவே படிப்பாதை, மின் இழுவை ரயில், ரோப் கார் என மூன்று வழிப்பாதைகளுக்கு 11 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அதன்பிறகு பக்தர்கள் மலைக்கோயிலுக்கு செல்ல அனுமதியில்லை. தொடர்ந்து அடுத்த நாள் வழக்கம்போல் பூஜைகள் நடைபெறும். பக்தர்கள் தரிசனத்துக்கு செல்லலாம் என கூறப்பட்டுள்ளது.

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் உத்தமபாளையம்.**
**ந.க.எண்: 4251 / 2024 /அ1**

ரமேஷ்பாபு
த.பெ. கணேசன்,
க.எண்: 49, வடக்குத் தெரு,
சன்னாசிபுரம்,
அணைக்கரைப்பட்டி அஞ்சல்,
போடிநாயக்கனூர் வட்டம்.
தேனி மாவட்டம்.

-மனுதாரர் -

-எதிர்-

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
போடிநாயக்கனூர்.

-எதிர்மனுதாரர் -

அறிவிப்பு

மேற்படி மனுவின், மனுதாரரின் பாட்டி தாயம்மாள் என்பவர் கடந்த 10.02.1997-ம் தேதியன்று அணைக்கரைப்பட்டி கிராமத்தில் இறந்ததை, மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்திலுள்ள இறப்பு பதிவேட்டில் பதிய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு மீது விசாரணை நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்புமிகு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

திரு.ரமேஷ்பாபு
மனுதாரர்

## அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வருவாய்கோட்டம். திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அலுவலக எண்.மூ.மூ.அ3/6835/2023.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆத்தூர் கிராமம், பள்ளர் தெரு க.எண்.1/8 என்ற முகவரியில் வசிக்கும் பண்டாரம் மகன் மொட்டையாண்டி ஆகிய நான் எனது தாயார் "பிச்சையம்மாள்" க/பெ.பண்டாரம் என்பவர் கடந்த 12.06.1980–ம் தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டதற்கு இறப்பினை பதிவு செய்யக்கோரி மனு செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான 7 நாட்களுக்குள் தொடர்புடைய கரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம்.

ப.மொட்டையாண்டி, த/பெ.பண்டாரம்,
க.எண்.1/8, பள்ளர் தெரு, ஆத்தூர் கிராமம், ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**மாண்புமிகு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தேனி,**
**C.M.A.No.5/2024 In**
**E.A.No.92/2010 In**
**E.P.No. 192/2008 In**
**O.S.No.21/2008**

S.பாபு, M.A., B.Ed., LLM,
S/o. சுப்ரமணியன்,
எண்.19, பட்டானி செட்டியார் தெரு,
பொம்மையகவுண்டன்பட்டி,
தேனி வட்டம். தேனி மாவட்டம்.

-மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்/ தகாத மனுதாரர் -

1) D.மோகன்ராம், S/o. V.துரைராஜ்,
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,
சோழவந்தான். மதுரை மாவட்டம்.
2) திருவேங்கடகண்ணன்,
S/o.V.துரைராஜ்,
எண்.19, பட்டானி செட்டியார் தெரு,
பொம்மையகவுண்டன்பட்டி.
தேனி வட்டம். தேனி மாவட்டம்.
3) ஜெயலட்சுமி, D/o.V.துரைராஜ்,
எண்.19, பட்டானி செட்டியார் தெரு,
பொம்மையகவுண்டன்பட்டி.
தேனி வட்டம். தேனி மாவட்டம்.

-3, 4, 5, எதிர்மனுதாரர்கள்/2ம் எதிர்மனுதாரரின் வாரிசுதாரர்கள் -

மேற்படி மனுவின் மனுதாரர்/மேல்முறையீட்டாளர்/தகாத மனுதாரர் தாக்கல் செய்துள்ள சீராய்வு மனுவில் தாங்கள் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க எதிர்வரும் 15.10.2024-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் அவர்கள் மூலமோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியதென்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

S.பாபு, M.A., B.Ed., LL.M.,
பொம்மையகவுண்டன்பட்டி,
தேனி மாவட்டம்.
மனுதாரர்/மேல்முறையீட்டாளர்/
தகாத மனுதாரர்

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் உத்தமபாளையம்.**
**ந.க.எண்: 4243 / 2024 /அ1**

ரமேஷ்பாபு
த.பெ. கணேசன்,
க.எண்: 49, வடக்குத் தெரு,
சன்னாசிபுரம்,
அணைக்கரைப்பட்டி அஞ்சல்,
போடிநாயக்கனூர் வட்டம்.
தேனி மாவட்டம்.

-மனுதாரர் -

-எதிர்-

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
போடிநாயக்கனூர்.

-எதிர்மனுதாரர் -

அறிவிப்பு

மேற்படி மனுவின், மனுதாரரின் தாத்தா திரு. சன்னாசி என்பவர் கடந்த 05.03.1991-ம் தேதியன்று அணைக்கரைப்பட்டி கிராமத்தில் இறந்ததை, மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்திலுள்ள இறப்பு பதிவேட்டில் பதிய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு மீது விசாரணை நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்புமிகு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

திரு.ரமேஷ்பாபு
மனுதாரர்

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் உத்தமபாளையம்.**
**ந.க.எண்: 4249 / 2024 /அ1**

முருகன்
த.பெ. சன்னாசி,
க.எண்: 49, மாரியம்மன் கோவில் தெரு, சன்னாசிபுரம்,
அணைக்கரைப்பட்டி அஞ்சல்,
போடிநாயக்கனூர் வட்டம்.
தேனி மாவட்டம்.

-மனுதாரர் -

-எதிர்-

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
போடிநாயக்கனூர்.

-எதிர்மனுதாரர் -

அறிவிப்பு

மேற்படி மனுவின், மனுதாரரின் தம்பி மனைவி நாகஜோதி என்பவர் கடந்த 10.05.2002-ம் தேதியன்று அணைக்கரைப்பட்டி கிராமத்தில் இறந்ததை, மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்திலுள்ள இறப்பு பதிவேட்டில் பதிய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு மீது விசாரணை நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்புமிகு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

திரு.முருகன்
மனுதாரர்

**உட்கோட்டநடுவர் நீதிமன்றம்/ சார் ஆட்சியர் அலுவலகம், பரமக்குடி.**
**ந.க.பி 6/4467/2024**

திரு. P.அன்பழகன் ,
த/பெ. பழனிவேல்
1/81 கூடக்குளம், கமுதி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம் - 623605.

-மனுதார்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாராகிய நான் எனது தந்தை பழனிவேல் 14/03/1974 அன்று இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம் கூடக்குளம் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்ய கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 18/10/2024 தேதியன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறஉள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் அறிவிப்பு வெளியியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம்.

மனுதாரர்
P. அன்பழகன்.

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் உத்தமபாளையம்.**
**ந.க.எண்: 4250 / 2024 /அ1**

முருகன்
த.பெ. சன்னாசி,
க.எண்: 49, மாரியம்மன் கோவில் தெரு, சன்னாசிபுரம்,
அணைக்கரைப்பட்டி அஞ்சல்,
போடிநாயக்கனூர் வட்டம்.
தேனி மாவட்டம்.

-மனுதாரர் -

-எதிர்-

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
போடிநாயக்கனூர்.

-எதிர்மனுதாரர் -

அறிவிப்பு

மேற்படி மனுவின், மனுதாரரின் தம்பி திரு. கோபால் என்பவர் கடந்த 20.12.2000-ம் தேதியன்று அணைக்கரைப்பட்டி கிராமத்தில் இறந்ததை, மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்திலுள்ள இறப்பு பதிவேட்டில் பதிய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு மீது விசாரணை நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்புமிகு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

திரு.முருகன்
மனுதாரர்

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.**
**ந.க.எண்.4452/2022/ஆ2**

சிவனாண்டி
த/பெ.மலையாண்டி தேவர்
1/8,K.P.ஒத்தபட்டி, அ.கொக்குளம்
திருமங்கலம் தாலுகா
மதுரை மாவட்டம்.

------- மனுதாரர்

--- எதிர் ---

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருமங்கலம்.

--------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாராகிய நான், எனது தாயார் அன்னக்கொடி, க/பெ.மலையாண்டி தேவர் என்பவர் கடந்த 22.04.2012-ம் தேதி திருமங்கலம் வட்டம்,அ.கொக்குளம்,K.P.ஒத்தபட்டி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
சிவனாண்டி
K.P.ஒத்தபட்டி, அ.கொக்குளம்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோவிலுடையான் கோவிலில்

# புரட்டாசி திருத்தேர் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

**விருதுநகர், அக். 05-**

ஸ்ரீ வில்லிபுத்தூர் வைணவ தளங்களில் மிக சிறப்பு பெற்றதாகும் இங்கு ஆதி கால முதல் பரம்பொருளாகிய மகாவிஷ்ணு வடபத்ர சாயி என்ற பெயர் கொண்டு ஸ்ரீதேவி பூதேவி உடன் பக்தர்களுக்கு காட்சி வழங்கி அருள் பாலித்து வருகிறார். இந்த வட பத்திர சயன பெருமாளுக்கு தான் ஆண்டாள் பூ மாலை சூட்டி அழகு பார்த்து திருப்பாவை பாடல்களை பாடினார்.

இதன் காரணமாக ஆண்டாள் சூடிக்கொடுத்த சுடர் கொடியாள் என்னும் சிறப்பு பெயர் பெற்றார். ஆழ்வார்களில் முதன்மையான பெரியாழ்வாரும் ஆண்டாளும் ஒரு சேர மங்கள சாசனம் செய்து வழிபட்ட சிறப்புடைய வட பெரும் கோவில் உடையான் புரட்டாசி திருவோண பிரம்மோற்சவ விழா நேற்று காலை தொடங்கியது.

இதனை முன்னிட்டு பெருமாளுக்கும் ஸ்ரீதேவி பூதேவிக்கும் சிறப்பு திருமஞ்சனம் நடத்தப்பட்டு விசேஷ அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.

இதனைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு சித்திரை நட்சத்திரம் விருச்சிக லக்னத்தில் கோவில் அர்ச்சகர் கோபி பட்டர் கொடியேற்றி வைத்து விழாவை துவக்கி வைத்தார் உடன் சாரதி பட்டர் ஹரிஷ் பட்டர் ஸ்தானிகம் ரமேஷ் பிரசன்னா ஆகியோர் பூஜைகளை நடத்தி வைத்தனர். இதனைத் தொடர்ந்து கொடி மரத்திற்கு தீபாராதனை சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. அப்பொழுது ஏராளமான பக்தர்கள் திரண்டு இருந்தனர்.

மேலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும் வடபத்ர சயன பெருமாள் காலை இரவு வேளைகளில் வீதி உலாவும் 8 ஆம் தேதி பெரிய பெருமாள் தங்க கருட சேவையிலும் 12ஆம் தேதி திருத்தேர் வீதி உலாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

இவ்விழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் பி ஆர் வெங்கட்ராமராஜா அறங்காவலர்கள் மதுரை அறநிலையத்துறை இணை ஆணையர் க.செல்லத்துரை விருதுநகர் உதவி ஆணையர் து.வளர்மதி கோவில் செயல் அலுவலர் சௌ.சக்கரை அம்மாள் ஆய்வாளர் முத்து மணிகண்டன் மற்றும் கோவில் அலுவலர்களும் திருக்கோவில் பணியாளர்களும் செய்திருந்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## நத்தத்தில் தாலுகா அலுவலகத்தில் தீயணைப்பு துறையினர் ஒத்திகை



**நத்தம், அக். 05-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தாலுகா அலுவலக வளாகத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் குழு சார்பாக விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதில் நிலைய அலுவலர் விவேகானந்தன், உதவி அலுவலர் அம்சராஜன் உள்ளிட்ட10 பேர் கொண்ட தீயணைப்பு குழு வீரர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர்.இதில் வடகிழக்கு பருவ மழை காலங்களில் மழை, வெள்ளங்களில் பேரிடர் மீட்பு பணிகள் மூலம் எப்படி மீட்பது என்றும், வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை கயிறுகட்டி மீட்பது எப்படி என்றும் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்க பட்டது.முகாமில் வருவாய்த்துறையினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் கலைக்கல்லூரியில் விளையாட்டு விழா




**விருதுநகர், அக். 05-**

கிருஷ்ணன்கோவில், கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 20 வ து விளையாட்டு விழா கல்லூரி வேந்தர் கே. ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது.கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். கோபாலகிருஷ்ணன் வரவேற்று பேசினார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள்,சான்றிதழ்கள், சாம்பியன் கோப்பையும் வேந்தர் ஸ்ரீதரன் வழங்கி பாராட்டி பேசினார். கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் சந்திரன் , பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் விளையாட்டு போட்டிகளையும், விழாவையும்,சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## முதுகுளத்தூரில் விவசாயத்துறை மூலம் வேப்பங்கன்றுகள் மானியத்தில் விநியோகம்



**முதுகுளத்தூர், அக். 05-**

முதுகுளத்தூரில் விவசாயத்துறை மூலம் வேப்பங்கன்றுகள் மானியத்தில் விநியோகிக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டாரத்தில் தற்போது விவசாயப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது. வேளாண்மை துறை மூலம் மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசு உதவி பெறும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நடப்பாண்டில் சிறப்பு திட்டமாக முதன்மைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வேப்பங்கன்றுகள் முழு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஏக்கர் முழுவதும் குறை அடர்வு முறையில் நடவு செய்வதற்கு 200 கன்றுகள் என்ற வீதமும் வரப்பு ஓரங்கள் பண்ணை குட்டைகளின் ஓரங்கள் போன்ற இடங்களில் நடவு செய்வதற்கு ஏக்கருக்கு 60 கன்றுகள் என்ற வீதத்திலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 ஏக்கர் பரப்பளவுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் வேப்பங்கன்றுகள் விநியோகத்தை இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (மாநிலத் திட்டம்) அமர்லால் துவக்கி வைத்தார். மேலக்கொடுமலூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு வேப்பங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டது மற்றும் நல்லுக்குறிச்சி கிராமத்தில் விவசாய வயலில் வேப்ப மரக் கன்றுகள் நடுவதனை வேளாண்மை துணை இயக்குனர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த திட்டத்தின் கீழ் பயன் பெற ஆதார் அட்டை மற்றும் பட்டா விவரங்களுடன் முதுகுளத்தூர் வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வேப்பங்கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம் என்ற விவரத்தினை முதுகுளத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கேசவராமன் தெரிவித்தார்.



**மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 4-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் 66-வது வார்டு அ.தி.மு.க. சார்பில் கோச்சடை முத்தையா கோயில் அருகே வட்ட செயலாளரும், கவுன்சிலருமான செயலாளர் பி.கே.எம்.மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் மற்றும் புதிய உறுப்பினர்கள் பங்கேற்ற ஆலோசனை கூட்டத்தில் பகுதி செயலாளர் பைக்காரா முத்துவேல் கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் நிர்வாகிகள் விநாய மூர்த்தி, முனியாண்டி, வேளாங்கண்ணி, கருப்பசாமி, ரமேஷ், கார்த்தி, கணேசன், சிவா, கருப்பையா, பரிமளா, முத்து சிதம்பரம், லட்சுமி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

# தி.மு.க.,வின் அலங்கோல ஆட்சியில் அனைத்து தரப்பினருக்கும் பாதிப்பு

## மருத்துவர் அணி துணை செயலாளர் டாக்டர் விஜயபாண்டியன் குற்றச்சாட்டு

**மதுரை, அக். 05-**



தி.மு.க.,வின் அலங்கோல ஆட்சியில் அரசு ஊழியர்கள் பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தி.மு.க., ஆட்சிக்கு வரும் சட்டசபை தேர்தலில் மக்கள் முற்றுப்புள்ளி வைப்பர் என மதுரையில் அ.தி.மு.க., மருத்துவர் அணி மாநில துணை செயலாளர் உசிலம்பட்டி டாக்டர் எம். விஜய பாண்டியன் குற்றம் சாட்டினார்.

மதுரையில் அ.தி.மு.க., மருத்துவர் அணி மாநில துணை செயலாளர் உசிலம்பட்டி டாக்டர் எம். விஜய பாண்டியன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது :

தி.மு.க., ஆட்சிக்கு வந்தால் பூரண மதுவிலக்கு கொண்டு வருவோம். அரசு ஊழியருக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வருவோம். விலைவாசிகளை குறைப்போம் என கடந்த சட்டசபை தேர்தலின் போது தற்போதைய முதல்வரும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின் பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசினார். அதை நம்பி மக்கள் அனைத்து தரப்பினரும் தி.மு.க.,விற்கு வாக்களித்தனர்.

ஆனால் ஆட்சிக்கு வந்த முதல்வர் ஸ்டாலின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பூரண மதுவிலக்கு கொண்டு வரவில்லை. விலைவாசியை குறைக்க நடவடிக்கை எடுக்காத உடன் விலைவாசியை கட்டுப்படுத்தவும் தவறிவிட்டார்.

அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வரவில்லை.

ஆனால் அ.தி.மு.க., ஆட்சியில் முன்னாள் முதல்வர்கள் ஜெயலலிதா, எடப்பாடியார் தலைமையில் கொண்டு வரப்பட்ட மக்கள் நலம் பயக்கும் பல்வேறு திட்டங்களை தி.மு.க., அரசு கைவிட்டு விட்டது. மாணவர்களுக்கு இலவச லேப்டாப் இலவச சைக்கிள் மற்றும் இலவச கல்வி உபகரணங்கள், பெண்களுக்கு தாலிக்கு தங்கம் திருமண நிதி உதவி திட்டம், அம்மா உணவகம் அம்மா குடிநீர் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலம் பயக்கும் திட்டங்களை முன்னாள் முதல்வர்கள் ஜெயலலிதா எடப்பாடி யார் கொண்டு வந்த ஒரே காரணத்திற்காக தி.மு.க., அரசியல் காழ்ப்புணர்ச்சியால் நிறுத்தி விட்டது.

மேலும் தி.மு.க., ஆட்சியில் சட்டம் ஒழுங்கு காப்பாற்றவும் தற்போதைய தி.மு.க., அரசு தவறிவிட்டது. இதுகுறித்து கேள்வி எழுப்பும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு சரியான பதில் தர முடியாமல் முதல்வர் ஸ்டாலின் அவரை வசை பாடுகிறார். மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் தன் மகன் உதயநிதிக்கு துணை முதல்வர் பொறுப்பு வாங்கி கொடுப்பதிலேயே காலத்தை கடத்தி விட்டார். தி.மு.க.,வில் தகுதியான மூத்த தலைவர்கள் இருக்கும் போது உதயநிதி துணை முதல்வரானது அக்கட்சியின்ருக்கே பிடிக்கவில்லை.

திமுக ஆட்சியில் கொலை கொள்ளை தினமும் வாடிக்கையாகிவிட்டது. ஆனால் அதிமுக ஆட்சியில் தமிழகம் அமைதி பூங்காவாக இருந்ததை மக்கள் மறக்கவில்லை. தி.மு.க.,வின் இந்த அலங்கோல ஆட்சிக்கு வரும் சட்டசபை தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவர். தமிழகம் மீண்டும் அமைதி பூங்காவாக திகழவும் அனைத்து துறைகளில் தன்னிறைவு பெறவும் முன்னாள் முதல்வர் எடப்பாடியாரை ஆதரிக்கவும் மக்கள் தயாராகிவிட்டனர். இவ்வாறு அ.தி.மு.க., மருத்துவரின் மாநில துணை செயலாளர் உசிலம்பட்டி டாக்டர் விஜயபாண்டியன் கூறினார்.

## 2030-க்குள் இந்தியாவில் ஒரு மில்லியன் அரசாங்கப் பள்ளிகளை அதன் இலக்கை அடைய ஷிக்ஷக்ரஹா ஏடபிள்யூஎஸ்-ஐ பயன்படுத்துகிறது

**சென்னை, அக் 05-**

இந்தியாவில் ஒரு மில்லியன் அரசாங்கப் பள்ளிகளை மேம்படுத்துவதற்கான மக்கள் கல்வி இயக்கமான ஷிக்ஷக்ரஹா, இந்தியா முழுவதும் அதன் தொழில்நுட்ப அடிப்படையிலான மேம்பாட்டு திட்டங்களுக்கு அமேசான் வெப் சர்வீசஸ் (AWS) வழங்கும் கிளவுட் கம்ப்யூட்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. ஒரு மக்கள் இயக்கமாக, ஷிக்ஷக்ரஹா அரசாங்க அமைப்புகள், உள்ளூர் மக்கள் நல அமைப்புகள் (CSOs), இளைஞர்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த குழுக்களை ஒன்றிணைத்து செயல்படும். 2030-க்குள் 100 மாவட்டங்களில் 40 மில்லியன் குழந்தைகளில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.மேலும் இந்த இயக்கமானது அருணாச்சல பிரதேசம், அசாம், பீகார், சத்தீஸ்கர், ஹரியானா, ஜார்கண்ட், கர்நாடகா, காஷ்மீர், ஒடிசா, பஞ்சாப், புதுச்சேரி, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் உத்தரபிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

ஷிக்ஷக்ரஹா சரிசெய்ய விரும்பும் பிரச்சினை,இந்தியாவில் உள்ள அனைத்து அரசாங்கப் பள்ளிகளையும் மேம்படுத்துவதாகும். இந்த சவாலை எதிர்கொள்ள தொழில்நுட்பத்தை தான் பயன்படுத்த வேண்டும் என்றாலும், கிளவுட் கம்ப்யூட்டிங் மூலம் மட்டுமே தொழில்நுட்ப திட்டங்களை வழங்க முடியும் என்பதையும் நாங்கள் அறிவோம் என்று ஷிக்ஷக்ரஹா இயக்கத்தின் இணை நிறுவனர்களில் ஒருவரான சிக்ஷாலோகம் தலைமை தொழில்நுட்ப அதிகாரி விஜயஸ்ரீ அர்ஸ் கூறினார். சிக்கலான கல்வி ஏற்றத்தாழ்வு சவாலை விரைவாகவும், சிறப்பாகவும், நீண்ட கால அடிப்படையிலும் தீர்ப்பதற்கு சிக்ஷாலோகம் கூட்டு நடவடிக்கையில் நம்பிக்கை கொண்டுள்ளது மற்றும் பல ஆண்டுகளாக, முறையான கல்வி மாற்றத்திற்கு இதனை துரிதப்படுத்தியுள்ளது மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து, சிக்ஷாலோகம் இப்போது ஷிக்ஷக்ரஹா இயக்கத்தை தீவிரமாக கட்டியெழுப்புகிறது.

## நீர்க்கட்டி பாதிப்புள்ள கர்ப்பிணியிடமிருந்து செயல்படாத சிறுநீரகத்தை அகற்றி மருத்துவர்கள் சாதனை

**நெல்லை, அக். 05-**

இந்நகரில் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் முன்னணி மருத்துவமனையாக செயல்பட்டுவரும் அன்னை வேளாங்கண்ணி மருத்துவமனை, 22 வாரங்கள் கருவை தாங்கியிருந்த 24 வயதான இப்பெண்ணுக்கு மிக நுட்பமான லேப்ராஸ்கோபி அறுவைசிகிச்சையை வெற்றிகரமாக செய்திருக்கிறது. அத்துடன் ஒரு பெரிய சிறுநீரக நீர்க்கோவை கட்டியிருந்த செயல்படாத வலது சீறுநீரகமும் இச்செயல்முறையில் அகற்றப்பட்டது. கருவகத்தில் உள்ள குழந்தையின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க ஆபத்தை வளர்ச்சி கண்டுவரும் நீர்க்கட்டியை ஏற்படுத்தி வருவதால் ஒரு அவசரநிலை சிகிச்சையாக இந்த அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இச்சிகிச்சை மேற்கொள்ளப்படவில்லையென்றால் பிரசவத்தின்போது தாய்க்கு உயிருக்கு ஆபத்தான சிக்கல்கள் ஏற்படுவதற்கு அது வழிவகுத்திருக்கும். பொது மற்றும் லேப்ராஸ்கோபி அறுவைசிகிச்சைத் துறையின் தலைவர் டாக்டர். அந்தோணி ராஜ் தலைமையிலான அறுவைசிகிச்சை நிபுணர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் உள்ளடக்கிய குழு இப்பெண்ணுக்கு இந்த அறுவைசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டது.

இது தொடர்பாக, டாக்டர். அந்தோணி ராஜ் கூறுகையில், கருவுற்ற பெண்களில் பெரியளவிலான சிறுநீரக நீர்க்கோவை கட்டியுடன் கூடிய சிறுநீரகம் காணப்படுவது அரிதானது. கருவுற்ற பெண்களில் சுமார் 5% நபர்களிடமே இது உருவாகிறது. பாதிக்கப்பட்ட சிறுநீரகத்துடன் இந்த நீர்க்கட்டியை அகற்றுவது உடனடியாக செய்யப்பட வேண்டியிருந்தது.

எனினும், கருவகத்தில் வளரும் குழந்தையின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளும்போது, இந்த அறுவைசிகிச்சை அதிக சவாலானதாக இருக்கக்கூடும். லேப்ராஸ்கோபி செயல்முறைகளில் எமது நிபுணத்துவம், மேம்பட்ட நவீன கட்டமைப்பு வசதிகள் மற்றும் உயர்நிலை தொழில்நுட்பம் ஆகியவற்றின் காரணமாக எமது மருத்துவமனையில் இந்த அறுவைசிகிச்சையை எங்களால் வெற்றிகரமாக செய்ய முடிந்தது என்று கூறினார்.

### காந்தி ஜெயந்தியை முன்னிட்டு

## வத்தலக்குண்டு பகுதியில் கிராம சபை கூட்டம்



**வத்தலக்குண்டு, அக். 05-**

வத்தலக்குண்டு பகுதியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது!

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்டு உள்ள 17 கிராம ஊராட்சிகளில் காந்தி ஜெயந்தி கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி நிர்வாகம் பொது நிதி செலவீனம் இணைய வழி மழைப்பிரிவு கட்டிட வரைபட அனுமதி கலைஞர் கனவு இல்லம் ஊரக வீடுகள் பராமரிப்பு 2023,2024 ஆண்டு தணிக்கை அறிக்கை இணையவழி வீட்டு வரி குடிநீர் கட்டணம் வரி வசூல் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது..

கட்டக்காமன்பட்டி ஊராட்சி. கட்டக்காமன்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைவர் மகேஸ்வரி தலைமை வைத்தார் துணைத் தலைவர் செல்வி பற்றாளர் மனோகரன் ஆகியோர் முன்னிலை வைத்தனர் ஊராட்சி செயலர் பெருமாள் தீர்மானங்கள் வாசித்தார் அனைத்து வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

**கணவாய் பட்டி ஊராட்சி**

கணவாய் பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு தலைவர் ரமேஷ் தலைமை வைத்தார் வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன் ,வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் உதயகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் துணைத் தலைவர் செல்வின் நாச்சியப்பன் பற்றாளர் சோரூபராணி ஆகியோர் முன்னிலை வைத்தனர் ஊராட்சி செயலர் முத்துகுமார் தீர்மானங்கள் வாசித்தார் அனைத்து வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

**ஜி தும்மலபட்டி ஊராட்சி**

ஜி தும்மல பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் ஜெயபிரியா நடராஜன் தலைமை வகித்தார் துணைத் தலைவர் சங்கரேஸ்வரி பற்றாளர் நாச்சியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன. வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் உதயகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். ஊராட்சி செயலர் சோலைமலை தீர்மானங்கள் வாசித்தார். அனைத்து வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

**கோம்பைப்பட்டி ஊராட்சி**

கோம்பைப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் காமாட்சி கென்னடி தலைமை வைத்தார் துணைத் தலைவர் ஜெர்மன் மேரி பெல்சியா. ஒன்றிய குழு உறுப்பினர் சூசைரெசி பற்றாளர் ரவி, கிராம நிர்வாக அலுவலர் சரண்யா நாகேந்திரன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். ஊராட்சி செயலர் பிரபு தீர்மானங்கள் வாசித்தார் அனைத்து வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்

**மல்லணம்பட்டி ஊராட்சி**

மல்லணம் பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைவர் முருகன் தலைமை வைத்தார் துணைத் தலைவர் ராதிகா தங்க பாண்டியன். பொற்றாளர் ரூபன் ஆகியோர் முன்னில வைத்தார். ஊராட்சி செயலர் சங்கையா தீர்மானங்கள் வாசித்தார். அனைத்து வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்

**செங்கட்டாம்பட்டி ஊராட்சி**

செங்கட்டாம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு தலைவர் கோபி கிருஷ்ணன் தலைமை வைத்தார் துணைத் தலைவர் வளர்மதி பற்றாளர் முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஊராட்சி செயலர் செல்வக்குமார் தீர்மானங்கள் வாசித்தார் அனைத்து வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

## புதுச்சேரி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பில் பின்தங்கிய 60 குழந்தைகளுக்கு கல்வி மற்றும் உணவு வழங்குகிறது

**புதுச்சேரி, அக் 05-**

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்-ன் சிஎஸ்ஆர் நிகழ்ச்சியின் ஒரு நிகழ்வாக புதுச்சேரி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பாக நுண் கற்றல் மையம் கடலூர் தென்னம்பாக்கத்தில் தொடங்கப்பட்டது.




இந்த மையத்தில் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய 60 குழந்தைகளுக்கு கல்வி மற்றும் உணவு ஆகியவற்றை தனல் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து மலபார் குழுமம் வழங்குகிறது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக ரமேஷ் (மாமன்ற உறுப்பினர் தென்னம்பாக்கம்), ராஜேஸ்வரி (தலைவர் தென்னம்பாக்கம்), அப்சல் (திட்ட ஒருங்கிணைப்பாளர் தனல்), ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்களுடன் அமல் நாதன் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் புதுச்சேரி கிளை தலைவர்) மணிகண்டன் ரமேஷ் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் புதுச்சேரி கிளை வர்த்தக மேலாளர்), ஆகியோர் உடனிருந்தனர். இவை தவிர மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூகப் பொறுப்பு முன்முயற்சிகள் இதரகாரணங்கள் ஆகும். தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது.

## இன்னும் 5 விக்கெட்டுகள்தான்:
# டி-20 போட்டிகளில் 2 சாதனைகளை படைக்கிறார் ஹர்த்திக் பாண்ட்யா



**புதுடெல்லி, அக். 05-**

இன்னும் 5 விக்கெட்டுகள் எடுத்தால் டி20 போட்டிகளில் 2 வரலாறு சாதனைகளை படைக்க பாண்ட்யாவுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நாளை வங்கதேசத்திற்கு எதிராக தொடங்கும் டி-20 தொடரில் அந்த சாதனைகளை படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சுற்றுப்பயணம்...**

வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான டி20 தொடர் நாளை (6ம் தேதி) தொடங்குகிறது.

**சூர்யகுமார் யாதவ்...**

இந்த தொடருக்கான இந்திய அணி சூர்யகுமார் யாதவ் தலைமயில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் ஹர்திக் பாண்ட்யா, சஞ்சு சாம்சன், ரிங்கு சிங் போன்ற முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்நிலையில், வங்காளதேசத்திற்கு எதிரான டி20 தொடரில் இந்தியாவின் அதிரடி ஆல்ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா 2 மாபெரும் சாதனைகளை படைக்க வாய்ப்பு உள்ளது.

**4வது இடத்திலும்...**

அதாவது, சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் யுஸ்வேந்திர சாஹல் (96 விக்கெட்) முதலிடத்திலும், புவனேஷ்வர் குமார் (90 விக்கெட்) 2ம் இடத்திலும், ஜஸ்ப்ரீத் பும்ரா (89 விக்கெட்) 3வது இடத்திலும், ஹர்திக் பாண்ட்யா (86 விக்கெட்) 4வது இடத்திலும் உள்ளனர்.

**2 சாதனைகள்....**

வங்காளதேசத்திற்கு எதிரான டி20 தொடரில் பாண்ட்யா இன்னும் 5 விக்கெட் எடுத்தால் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அதிக விக்கெட் கைப்பற்றிய வேகப்பந்துவீச்சாளராக மாறுவார். அதுமட்டுமில்லாமல் 4 விக்கெட் கைப்பற்றினால் வங்காளதேச அணிக்கு எதிராக டி20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட் கைப்பற்றிய இந்திய பந்துவீச்சாளராகவும் மாறுவார்.

### இந்திய அணிக்காக அதிக விக்கெட்கள்:

1) யுஸ்வேந்திர சாஹல் - 96 விக்கெட்.
2) புவனேஷ்வர் குமார் - 90 விக்கெட்.
3) ஜஸ்ப்ரீத் பும்ரா - 89 விக்கெட்.
4) ஹர்திக் பாண்ட்யா - 86 விக்கெட்.
5) அர்ஷ்தீப் சிங் - 83 விக்கெட்.

### இந்திய - வங்களதேச இடையே...

1) யுஸ்வேந்திர சாஹல் - இந்தியா - 9 விக்கெட்.
2) தீபக் சாஹர் - இந்தியா - 8 விக்கெட்.
3) அல்-அமின் ஹொசைன்- வங்காளதேசம் - 8 விக்கெட்.
4) ரூபெல் ஹொசைன் - வங்காளதேசம் - 7 விக்கெட்.
5) வாஷிங்டன் சுந்தர் - இந்தியா - 7 விக்கெட்.
6) ஷகிப் அல் ஹசன் - வங்காளதேசம் - 7 விக்கெட்.
7) ரவிச்சந்திரன் அஸ்வின் - இந்தியா - 6 விக்கெட்.
8) ஹர்திக் பாண்ட்யா - இந்தியா - 6 விக்கெட்.

# விராட் கோலியை சந்தித்த மாரியப்பன் தங்கவேலு



**புதுடெல்லி, அக். 05-**

விராட் கோலியை மாரியப்பன் தங்கவேலு சந்தித்த புகைப்படம் தற்போது வைராலியுள்ளது.

**வெண்கலப் பதக்கம்...**

மாற்றுத் திறனாளிகளுக்கான 17-வது பாரா ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்தது. இதில் ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் டி63 பிரிவு இறுதிப்போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு 1.85 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலப் பதக்கத்தை வென்றார் .

பாரா ஒலிம்பிக்கில் தொடர்ந்து 3 முறை பதக்கம் வென்று மாரியப்பன் சாதனை படைத்துள்ளார். 2016-ல் தங்கமும், டோக்கியோ 2020-ல் வெள்ளியும், பாரீஸ் 2024-ல் வெண்கலமும் வென்று சாதனை படைத்துள்ளார்.

**விராட் கோலி வாழ்த்து...**

இந்த நிலையில், மாரியப்பன் தங்கவேலு இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் விராட் கோலியை சந்தித்துள்ளார். அப்போது பாரீஸ் பாரா ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு விராட் கோலி வாழ்த்து கூறியுள்ளார் . இது தொடர்பான புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஆப்கான் கிரிக்கெட் வீரர் ரஷித்கானுக்கு திருமணம்



**காபூல், அக். 05-**

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ரஷித் கானுக்கு திருமணம் நடைபெற்றது.

நட்சத்திர வீரர்...

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ரஷித் கானுக்கு நேற்று முன்தினம் திருமணம் நடைபெற்றுள்ளது. இந்த திருமண விழாவில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் பலர் நேரில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இது தொடர்பான வீடியோ மற்றும் படங்கள் வைரலாகி வருகின்றன.

தலைநகர் காபூலில்...

ரஷித் கான் திருமணம் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஓட்டலில் நடந்துள்ளது. ஆப்கானிஸ்தான் அணியின் முன்னணி வீரரான முகமது நபி ஒரேயொரு கிங் கான் ஆன ரஷித் கானுக்கு திருமண வாழ்த்துக்கள். வாழ்நாள் முழுவதும் அன்பு, மகிழ்ச்சி நிறைந்திருக்க வாழ்த்துகள் என சமூக வலைத்தளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2015-ம் அறிமுகம்...

26 வயதாகும் ரஷித் கான் ஐந்து டெஸ்ட், 105 ஒருநாள் மற்றும் 93 டி20 போட்டிகளில் விளையாடிள்ளார். டெஸ்ட் போட்டியில் 34 விக்கெட்டுகளும், ஒருநாள் போட்டியில் 190 விக்கெட்டுகளும், டி20 போட்டியில் 152 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார். 2015-ம் ஆண்டு முதன்முறையாக ஜிம்பாப்வே அணிக்கெதிராக டி20 போட்டியின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகம் ஆனார்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# முதல்வர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டி
## துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்

**சென்னை, அக். 05-**

முதல்வர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டியை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதல்வர் கோப்பைக்கான மாநில விளையாட்டு போட்டிகள் நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் 24-ந்தேதி வரை சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் நடைபெறுகிறது.தடகளம், டென்னிஸ், பேட்மிண்டன், கபடி, சிலம்பம், பளுதூக்குதல், கால்பந்து, ஆக்கி, குத்துச்சண்டை, நீச்சல், கிரிக்கெட், கூடைப்பந்து, கைப்பந்து, கேரம், வாள்வீச்சு, செஸ், ஜிம்னாஸ்டிக்ஸ் உள்பட 36 வகையான விளையாட்டுகள் நடத்தப்படுகிறது.

இந்த நிலையில், சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தொடக்க விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் போட்டியை தொடங்கி வைத்தார். பாராஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற துளசிமதி, டிரிபிள் ஜம்ப் வீரர் பிரவீன் சித்ரவேல் ஆகியோர் தொடக்க விழாவில் ஜோதியை சென்றனர்.

# கடைசிப்பட பூஜையில் நடிகர் விஜய் பங்கேற்பு

**சென்னை, அக். 05-**

மாநாட்டுக்கான பூமி பூஜையில் பங்கேற்காத நடிகர் விஜய், அவரின் கடைசிப் படத்திற்கான பூஜையில் பங்கேற்றார்.

ஹெச். வினோத் - விஜய் கூட்டணியில் உருவாகும் விஜய் 69 திரைப்படத்தில் பாபி தியோல், பூஜா ஹெக்டே, பிரகாஷ் ராஜ், கௌதம் வாசுதேவ மேனன், நரேன், பிரியாமணி, மமிதா பைஜூ உள்ளிட்டோர் நடிக்கவுள்ளதாக இதுவரை அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்தப் படம் 2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியாகுமென படக்குழு ஏற்கனவே அறிவிந்திருந்த நிலையில், சென்னையில் படத்துக்கான பூஜை நேற்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நடிகர் விஜய்யுடன், இயக்குநர் வினோத், நடிகர்கள் பாபி தியோல், பூஜா ஹெக்டே, மமிதா பைஜூ ஆகியோர் கலந்து கொண்டனர். அரசியல் கட்சியை தொடங்கியுள்ள நடிகர் விஜய், இதுவே தனது கடைசிப் படம் என்று அறிவித்துள்ள நிலையில், இந்தப் படம் திரைத் துறையில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சத்தீஸ்கரில் என்கவுன்டர்: 30 நக்சல்கள் சுட்டுக்கொலை

**ராஞ்சி, அக். 05-**

சத்தீஸ்கரில் நடந்த என்கவுன்டரில் 30 நக்சல்களை பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

சத்தீஸ்கர் மாநிலம், நாராயண்பூர் மற்றும் தண்டேவாடா மாவட்டத்தின் எல்லையில் உள்ள அபுஜ்மாத் வனப்பகுதியில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத் அப்பகுதியில் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து காவல்துறையினரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது பாதுகாப்புப் படையினருக்கும் நக்சலைட்டுகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது. இந்த சண்டையில் 30 நக்சல்களை பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். தொடர்ந்து ஏழு நக்சல்களின் உடல்களும், ஏகே 47 உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்களும் அப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இதனிடையே என்கவுன்டர் நடந்ததை பஸ்தர் ஐஜி சுந்தர்ராஜ் உறுதி செய்துள்ளார். இதனால் அங்கு பரபரப்பு நிலவுகிறது.

## கல்வி, வேலைவாய்ப்பில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவில்
# மாநில அரசுகள் வழங்கும் உள் இடஒதுக்கீடு செல்லும்
## சுப்ரீம் கோர்ட் மீண்டும் உறுதி

**புதுடெல்லி, அக். 05-**

எஸ்.சி., எஸ்.டி. இட ஒதுக்கீட்டில் மாநிலங்களின் உள் ஒதுக்கீடு செல்லும் என சுப்ரீம் கோர்ட் மீண்டும் உறுதிசெய்து இதுதொடர்பான மறு ஆய்வு மனுக்களை தள்ளுபடி செய்து நேற்று உத்தரவிட்டது.

கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் பட்டியலின (எஸ்.சி.) மற்றும் பழங்குடியின (எஸ்.டி.) பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில், உள்ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது என்று சுப்ரீம் கோர்ட் அரசியல் சாசன அமர்வு கடந்த ஆக.1 ஆம் தேதி தீர்ப்பு வழங்கியது. சுப்ரீம் கோர்ட் 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் உள்பட 6 நீதிபதிகள் உள்ஒதுக்கீடு செல்லும் எனத் தெரிவித்தனர். நீதிபதி பெலா எம்.திரிவேதி மட்டும் மாறுபட்ட தீர்ப்பு வழங்கினார்.

பட்டியலினத்தில் மிகவும் பின்தங்கியவர்களுக்கு பஞ்சாப் அரசு கொண்டு வந்த உள் ஒதுக்கீடு செல்லும், எஸ்.சி., எஸ்.டி. உள் ஒதுக்கீட்டை மாநில அரசு வழங்க முடியும் என்று கூறினர். சுப்ரீம் கோர்ட் அரசியல் சாசன அமர்வு வழங்கிய இந்த தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும் என சுப்ரீம் கோர்ட்த்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை ஆய்வு செய்த தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான 7 நீதிபதிகள், 'இந்த மனுக்களில் எந்த முகாந்திரமும் இல்லை. அரசியல் சாசன அமர்வு அளித்த தீர்ப்பு சரியானது. பட்டியலினத்தவர்களில் மிகவும் பின்தங்கியவர்களுக்கு மாநில அரசுகள் உள் ஒதுக்கீடு வழங்கலாம்' என்று கூறினர். மேலும் இதனை மீண்டும் வழக்காக விசாரிக்க முடியாது என்று கூறி மறு ஆய்வு மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

### தெ.ஆ. ஜெர்சியில் பெயர்கள்



டி20 உலகக் கோப்பையில் தென்னாப்பிரிக்கா மகளிரணி தங்கள் அன்புக்குரியவர்களைக் கௌரவிக்கும் வகையில் சிறப்பு ஜெர்சிகளை உருவாக்கி உள்ளது. மகளிருக்கான 9-வது உலகக்கோப்பை போட்டிகள் ஐக்கிய அமீரகத்தின் ஷார்ஜா மற்றும் துபை ஆகிய நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டிகள் அக்டோபர் 3-ஆம் தேதி தொடங்கிய நிலையில் வருகிற அக்டோபர் 20 ஆம் தேதி நடைபெற இருக்கிறது.

தற்போது நடைபெற்று வரும் உலகக்கோப்பையில் தென்னாப்பிரிக்க மகளிரணியின் ஜெர்சியில் தங்களுக்கு பிரியமான நண்பர்கள் அல்லது உறவினர்கள் 5 பேரின் பெயர்களை பிரத்யேகமாகப் பதித்துக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அணியின் உள்ள ஒவ்வொரு வீராங்கனையும் தங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத மற்றும் தங்களுக்கு ஆதராவாக இருந்த 5 பேரின் பெயர்களை ஜெர்சியில் எம்பிராய்டரி செய்துகொள்ளலாம். அந்தப் பெயர்கள் ஜெர்சியின் காலர் பகுதியில் தெரியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமை செயலகத்தில், மத்திய அரசின் தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற வேலூர் மாவட்டம், இராஜகுப்பம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் இரா.கோபிநாத் தனது குடும்பத்தினருடன் சந்தித்து, விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

# தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள்: முதல்வர் ஸ்டாலினுடன் சந்திப்பு

**சென்னை, அக். 05-**

தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

2024- ம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருது பெற்ற ஆசிரியர்கள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இது தொடர்பாக வெளியிடப்படுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

2024-ம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருதிற்கு 38 மாவட்டங்களைச் சார்ந்த 102 ஆசிரியர்கள் இணையவழியில் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் பொம்மைகளை பயன்படுத்தி கற்பித்தல் உள்ளிட்ட பணிகளுக்காக வேலூர் மாவட்டம், ராஜகுப்பம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் ரா.கோபிநாத் மற்றும் மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்குதல் மற்றும் தொழிற்கல்வி கற்பித்தலில் கணினி தொழில்நுட்பம் பயன்பாடு உள்ளிட்ட பணிகளுக்காக மதுரை, லட்சுமிபுரம், டி.வி. எஸ் மேல்நிலைப் பள்ளியின் மேல்நிலை தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-1 ரா.சே.முரளிதரன் ஆகிய இரண்டு ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டு, இந்திய ஜனாதிபதியால் கடந்த செப்டம்பர் 5-ஆம் நாளன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "தேசிய நல்லாசிரியர் விருது" வழங்கப்பட்டது.

"தேசிய நல்லாசிரியர் விருது" பெற்ற ஆசிரியர்கள் ரா.கோபிநாத் மற்றும் ரா.சே.முரளிதரன் ஆகியோர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று (4.10.2024) தலைமைச் செயலகத்தில் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர். இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் எஸ்.மதுமதி, பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் ஆகியோர் உடனிருந்தனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு
# மத்திய அரசின் பங்கு குறித்து தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, அக். 05-**

சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்டத்திற்கு நிதி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள நிலையில் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு மத்திய அரசின் பங்கு எவ்வளவு என்பது குறித்து தமிழ்நாடு அரசு விளக்கமளித்துள்ளது.

மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் பேட்டி அளித்தார்.அப்போது பேசிய அவர், சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்டத்திற்கு நிதி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என்று தெரிவித்தார். தொடர்ந்து, மெட்ரோ ரெயில் திட்டம் 2ம் கட்டத்திற்கு மத்திய அரசு ரூ.63,000 கோடி நிதி வழங்குவதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் 2ம் கட்டத்திற்கு, மத்திய அரசு ரூ.63,246 கோடி நிதி வழங்கியுள்ளதாக பரவும் செய்தி தவறானது என தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பு குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. சென்னை மெட்ரோ திட்டத்திற்கு மத்திய அரசின் பங்கு ரூ.7,425 கோடி மட்டுமே. தமிழக அரசின் பங்கு- ரூ.22,228 கோடி, கடன் ரூ.33,593 கோடி பங்கிடப்பட்டுள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் 2ம் கட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்த நிலையில், தவறான தவலைப் பரப்பாதீர்கள் என தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பு குழு விளக்கம் அளித்துள்ளது.

# வரும் 17-ம் தேதி முதல் அ.தி.மு.க. தொடக்கவிழா பொதுக்கூட்டங்கள்
## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, அக். 05-**

வரும் 17-ம் தேதி முதல் அ.தி.மு.க. தொடக்கவிழா பொதுக்கூட்டங்கள் நடைபெறும் என்று எடப்பாடி பழனி சாமி அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், கழக நிறுவனத் தலைவர் 'பொன்மனச் செம்மல்' புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் போற்றி வளர்க்கப்பட்டு, பல்வேறு வரலாற்றுச் சாதனைகளைப் படைத்திட்ட மாபெரும் மக்கள் பேரியக்கமாம் 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' 17.10.2024 - வியாழக்கிழமையன்று 53-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு, 17.10.2024 முதல் 20.10.2024 வரை நான்கு நாட்கள் 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக 53-ஆவது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டங்கள்' கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் அனைத்து மாவட்டங்களிலும், கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் நடைபெற உள்ளன.

கழக சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தாங்கள் சார்ந்த சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்கள் மாவட்டத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தை, கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்றம், புரட்சித் தலைவி பேரவை, எம்.ஜி.ஆர். இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, அண்ணா தொழிற்சங்கம், வழக்கறிஞர் பிரிவு, சிறுபான்மையினர் நலப் பிரிவு, விவசாயப் பிரிவு, மீனவர் பிரிவு, மருத்துவ அணி, இலக்கிய அணி, அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, வர்த்தக அணி மற்றும் கலைப் பிரிவு உட்பட கழகத்தின் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளுடனும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் இணைந்து, சிறப்புப் பேச்சாளர்களுடன் தொடர்பு கொண்டு, பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களுக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும்; புதுச்சேரி, காரைக்கால் மாவட்டம், கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா, கேரளா, புதுடெல்லி மற்றும் அந்தமான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும், 17.10.2024 அன்று ஆங்காங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது திருஉருவச் சிலைகளுக்கும், படங்களுக்கும் மாலை அணிவித்து இனிப்பு வழங்கியும்; ஏழை, எளியோருக்கு அன்னதானம் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தங்கள் மாவட்டங்களில், கழகத்தின் 53-ஆவது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் நடத்தப்பட்டதன் விபரங்களையும்; கூட்டத்தில் கலந்துகொண்ட சிறப்புப் பேச்சாளர்கள் குறித்த விபரங்களையும்; அதே போல், தங்கள் மாவட்டத்தில் ஆங்காங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் விபரங்களையும் தலைமைக் கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார் .

### அரையிறுதியில் கோகோ காப்

சீனா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி பீஜிங் நகரில் நடந்து வருகிறது. இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காப், உக்ரைனின் யூலியா ஸ்டாரோடுப்ட்சேவா உடன் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 2-6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த கோகோ காப், ஆட்டத்தின் அடுத்த இரு செட்களை 6-2, 6-2 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார். இறுதியில் இந்த ஆட்டத்தில் 2-6, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் யூலியா ஸ்டாரோடுப்ட்சேவாவை வீழ்த்தி கோகோ காப் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் கோகோ காப் அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் கோகோ காப், ஸ்பெயினின் பவுலா படோசா உடன் மோத உள்ளார்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, தமிழ் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களை போற்றி பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில், 2023-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதை கவிஞர் மு.மேத்தாவுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி துறை செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர் இரா.வைத்திநாதன், கவிஞர் மேத்தாவின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, நீர்வளத்துறை சார்பில், 8 மாவட்டங்களில் ரூ.83 கோடியே 19 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள், புனரமைக்கப்பட்ட வாய்க்கால்கள், அணை மறுகட்டுமானப்பணி, புதிய குளம், புதிய அலுவலக கட்டிடம் உள்ளிட்ட 19 நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகளை, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர் க.மணிவாசன், முதன்மை தலைமை பொறியாளர் சா.மன்தமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை:

# அவசரகால செயல்பாட்டு மையத்தில் துணை முதல்வர் உதயநிதி ஆய்வு

சென்னை,அக். 05-

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

வடகிழக்கு பருவமழை அக்டோபர் 3-வது வாரத்தில் தொடங்க உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ள நிலையில், பருவமழையை எதிர்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, தமிழகம் முழுவதும் வெள்ளம் பாதிக்கக் கூடிய பகுதிகளில் அமைக்கப்படும் நிவாரண முகாம்கள், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முன் கூட்டியே பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள், வெள்ளத்தில் சிக்கிய மக்களை படகுகள் மூலம் மீட்பது, வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கைகள் உடனடியாக கட்டுப்பாட்டு மையத்திற்கு கொடுக்கப்பட்டு எவ்வாறு துரித நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பன உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து அதிகாரிகளிடம் உதயநிதி ஸ்டாலின் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய்த்துறை செயலாளர் அமுதா ஆகியோர் உடனிருந்தனர்.




சென்னை தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி, மாணவ-மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சிறப்பு விருந்தினர் அனிதா பால்துரை, துணைவேந்தர் மு.சுந்தர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில், வனத்துறை அமைச்சர் க.பொன்முடி தலைமையில், வனத்துறை அலுவலர்களுடன் துறை தொடர்பான செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் வனத்துறை செயலாளர் ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, பசுமைவழிச்சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் நேற்று, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான, எடப்பாடி கே.பழனிசாமியை, அ.தி.மு.க. செய்தித்தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான கோகுல இந்திரா, தனது பிறந்த நாளை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# கோவையில் ராணுவ தொழிற்பூங்கா: சுற்றுச்சூழல் ஆணையம் அனுமதி

சென்னை,அக். 05-

கோவை சூலூர் பகுதியில் அமையவுள்ள ராணுவ தொழிற்பூங்காவிற்கு தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

ரூ.260 கோடியில் கோவை மாவட்டம் சூலூர் வாரப்பட்டி ஊராட்சியில் ராணுவ தொழில் பூங்கா அமைகிறது.

370 ஏக்கரில் அமையவுள்ள தொழில் பூங்காவுக்கு தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

கோவை ராணுவ தொழிற்பூங்கா மூலம் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோவை மாவட்டம், சூலூர் வட்டத்தில் வாரப்பட்டி, கந்தம்பாளையம், சடையஞ்செட்டிபாளையம், பூசாரிபாளையம், வி.சந்திராபுரம், குளத்துப்பாளையம், புளியமரத்துப்பாளையம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி 421 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் சார்பில் ராணுவ தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படவுள்ளது.

# அரியானாவில் இன்று... (1-ம் பக்க தொடர்ச்சி)

கடைசிநாள் பிரச்சாரமான நேற்று முன்தினம் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடா ஆகியோர், உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் பிரச்சாரத்தில் பங்கேற்றனர். இந்த அனல் பறக்கும் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவடைந்தது.

**கருத்து கணிப்புகள்...**

தேர்தல் பிரச்சார காலம் முடிவடைநததால், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் ஏஜென்ட்டுகள் தவிர வாக்காளர்கள் அல்லாத அனைத்து அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் தொகுதிகளை விட்டு வெளியேறும்படி அரியானா தலைமை தேர்தல் ஆணையர் பங்கஜ் அகர்வால் அறிவுறுத்தியுள்ளார். தேர்தல் முடிந்தபின் அரை மணி நேரத்துக்கு பின்பே தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகளை வெளியிட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் தேர்தல்களில் பதிவான வாக்குகள் வரும் 8-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகின்றன.

**வாக்கு எண்ணிக்கை...**

அரியானா மாநிலத்தில் இன்று தேர்தல் நடக்கும் நிலையில், அங்கு பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் இடையே தான் கடும் போட்டி நிலவுகிறது. அரியானாவில் இப்போது நிலவும் அரசியல் களம் இதுதான். அங்கு அரசியல் களம் பரபரப்பானதாக மாறியுள்ள நிலையில், யார் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்பது அக். 8 தேர்தல் முடிவுகள் வெளியாகும் போது தான் தெரிய வரும்.

### தமிழகத்தில் திருச்சி, நீலகிரி உள்ளிட்ட

# 13 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை,அக். 05-

தமிழகத்தில் திருச்சி, நீலகிரி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக இன்று (05.10.2024) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும். இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, ஈரோடு, சேலம், கடலூர், மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை மறுநாள் (06.10.2024) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும். இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

07.10.2024: தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி, ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

08.10.2024: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி குமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35-35 டிகிரி செல்சியஸை ஒட்டியும். குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தி.மு.க. அரசை கண்டிக்கும் விதமாக வருகின்ற 9-ம் தேதி அ.தி.மு.க. சார்பில் நடைபெறவுள்ள மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் நேற்று 2-ம் நாளாக நடந்த பயிற்சி முகாமில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டு பேசினார்.